மாலை: 51 மணி: 5 மே 2009 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



வசந்த விழாவில்

சொர்ணாம்பிகை யாழ்மீட்டி மகிழும் கோலம்

தமிழகத்தின் ஆலயங்கள் தங்கமாகும் காலங்கள்!

பொன்னான வாய்ப்பு!

ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் பொன் ஆலயம் வழங்கும்

24கேரட் கோல்டு கோட்டிங்!

அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்

தொடர்புக்கு :
K.S.S. நாராயணன்
98848 77722

கலசங்கள் — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!

அளவு அடிகளில்	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
1	35,000	8,000	27,000
2	2,19,000	48,000	1,71,000
3	4,66,000	1,00,000	3,66,000
4	6,64,000	1,45,000	5,19,000
5	9,77,000	2,14,000	7,63,000
7	18,00,000	3,94,000	14,06,000

கொடி மரம் — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!

அளவு அடிகளில்	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
9	23 ல	6 ல	17 ல
12	31 ல	8 ல	23 ல
20	52 ல	14 ல	38 ல
30	78 ல	21 ல	57 ல
40	104 ல	27 ல	77 ல

கவசம்

அளவு	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
12″x 9″	28,000	10,000	18,000
15″x12″	47,000	16,000	31,000
24″x18″	1,12,000	39,000	73,000
36″x24″	2,25,000	78,000	1,47,000

தங்கரதம்

அளவு	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
8	69 ல	15 ல	54 ல
9	84 ல	18 ல	66 ல
10	99 ல	22 ல	77 ல
12	1,48 ல	33 ல	115 ல

தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2833 2655/4205 9911

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 வைகாசி மாதம்
மாலை 51. மணி 5 மே 2009

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

தமிழகத்து திருக்கோயில்களின் அருமைகளையும், பெருமைகளையும், இந்து சமயத்தின் சிறப்புகளையும் சமயத்தை வளர்த்திட்ட அடியார் பெருமக்கள், ஆழ்வார் பெருமக்கள் அருளாளர்களின் புகழினையும் எழுத்தோவியமாகக் கொண்டு காலக் கண்ணாடியாக வெளிவரும் பொன் விழாக் கண்ட **"திருக்கோயில்"** திங்கள் இதழின் சிறப்பு ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்கின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோடை வெயிலின் வெப்பத்தைத் தணிக்க ஆலயங்களில் "வசந்த விழா" கொண்டாடப்படுகிறது. வசந்தவிழாவில் குளிர்ந்த சோலையின் நடுவே யாழ் மீட்டிப் பாடியவாறு இன்பத்தில் திளைக்கும் அம்பிகையின் திருவுருவத்தை முகப்பாகக் கொண்டு இந்த இதழ் மலர்கிறது.

உள்முகப்பில் வாழ்வில் வழித்துணையாக வந்து வளம் தரும் செல்வப் பிரானான திருத்தணி முருகனைக் காண்கிறோம். வைகாசி விசாகத்திருநாளின் சிறப்பினை விளக்கும் வகையில் "விசாகனை வேண்டும் வடலூர் வள்ளலார்" என்ற தலைப்பிட்டு வழங்கியுள்ளார் புதுச்சேரி தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள்.

பிறவித் துன்பத்தை அகற்றி முக்தி இன்பத்தை அடைந்திட பிறர் பொருளை எட்டியாகக் கருத வேண்டும் என்பதை தவ முனிவர் பிறவிப்பயன் அடைந்த கதையுடன் "பிறர் பொருள் எட்டி" எனும் தலைப்பில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வழங்கியுள்ள அறவுரை அவரது நினைவலையாக இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

மனப்பயம் நீக்கிடும் காரமடை அருள்மிகு அரங்கனின் சிறப்புகளும், புராதனச் சிறப்புமிக்க சென்னை, வடபழனி அருள்மிகு சொர்ணாம்பிகை உடனாய அருள்மிகு பாரத்வாஜேஸ்வரர் ஆலய சிறப்புக்களும், கடன் தொல்லை தீர்ப்பவராக அருள்பாலிக்கும் திருச்சேறை வாழ் செந்நெறியப்பரின் சிறப்புகளும் இவ்விதழில் ஆலய உலாக்களாக வெளிவந்துள்ளன.

ஆன்றோர் வரிசையில் தவத்திரு ஆறுமுக நாவலரின் வாழ்க்கைக் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்தால் அனைவரும் சித்தராகி சிவலோகத்தையும், வைகுண்டத்தையும், உயிருடன் வாழும் போதே கண்டு களிப்படையலாம் என்பதை 'பசித்திரு, தனித்திரு, விழித்திரு' எனும் கட்டுரையில் வழங்கியுள்ளார் அரங்க. இராமலிங்கம் அவர்கள்.

மன்னார்குடி திரு.க.சுகுமாரன் அவர்களின் "தொண்டர் தம் பெருமை" குறித்து வழங்கியுள்ள கட்டுரையும், திரு.பெ.இராமநாதப்பிள்ளை அவர்களின் "உலகம் உய்ய உதித்தவர்" எனும் தொடரும் இவ்விதழில் வெளிவந்துள்ளன.

இந்த இனிய வேளையில் அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் பெருமானின் திருவருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழப் பிரார்த்திக்கிறேன். வாசகப் பெருமக்கள் தொடர்ந்து திருக்கோயில் இதழுக்கு தம் நல் ஆதரவினை வழங்கிட வேண்டுகிறேன்.

ப.ரா.சம்பத்

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்

குறளோவியம்

நாராயண் என்பது அந்தப் புகழ் பெற்ற மாவீரனின் பெயர். அந்தத் தீரமிக்க வாலிபரைத் திருமணம் செய்துகொள்ளுமாறு காந்தியடிகளே வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். முதலில் மறுத்தவர், முடிவாக ஒரு நிபந்தனையைக் கூறி இறுதியாக திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தார். நாடு விடுதலை பெறும்வரையில் கணவனும் மனைவியும் உடல் உறவு இல்லாமலே வாழ்வோம் என்றார். அவரது நிபந்தனையை ஏற்றுக் கொண்டு பிரபாவதி எனும் பெண்மணி மணம் புரிந்துகொண்டார்.

வசந்தகாலமெனும் வாலிபம் விடைபெற்றுக்கொள்கிற வரையிலே இந்தியாவுக்குச் சுதந்திரமும் வரவில்லை. இருவரிடையே உடலுறவும் ஏற்படவில்லை.

இரு உள்ளங்களும் இந்திய நாட்டு விடுதலைக்காக ஏங்கித் தவித்தன! இரு உள்ளங்களும் அந்த விடுதலைப்போர் வெற்றிக்காக உழைத்தன!

பிரபாவதி அம்மையார் கற்பரசியாகத் தன்னையும் காத்துக்கொண்டு தாய்நாடு மீட்கும் களத்தில் நின்ற தன் கணவனுக்கு உறுதுணையாக இருந்து அவரையும் காத்துக் கொண்டு, அளித்த வாக்கில் சற்றும் உறுதிநிலை தவறாமல் வாழ்ந்து தகுதி வாய்ந்த புகழுக்கும் உரியவராகத் திகழ்ந்து ஜெயப்பிரகாஷ் அவர்களுக்குப் பெருமை சேர்த்தார்.

அறிவில் சிகரமாய்–ஆற்றலில் சிங்கமாய்–அன்பின் அருவியாய் அடிமைத்தளை அறுக்கும் வீர உருவமாய் அவர் இருந்தார். இளமைப் பொலிவு மிகுந்த பருவத்தில் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குக் களம் பல கண்டார். பண்டித நேரு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்றவர்களின் வரிசையில் இடம்பெற்ற தளநாயகர், அவர் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துச் சிறை புகுந்ததும் உண்டு. அந்தச் சிறைக் காவல் மீறி தப்பித்து வெளியேறியதும் உண்டு. ஜெயபிரகாஷ்

தனக்கு வாய்த்த உறுதி நிறைந்த பெண்மணியின் துணையினால் ஜெயப்பிரகாஷ் எத்தனையோ இன்னல்களையும் கொடுமைகளையும் புன்னகையுடன் தாங்கிக் கொள்ள முடிந்தது.

இயற்கை உணர்வை அடக்கி–அல்ல; அல்ல–அப்படியொரு உணர்வே அவர்களை அணுக முடியாத நிலைபெற்று நாட்டுப்பற்றில் ஆழ்ந்திருந்த அந்த வீரரையும், வீராங்கனையையும் எண்ணும் போதெல்லாம் இளையதலைமுறையினர் தியாகச் சுடர்களாக மாறிடுவர் என்பது திண்ணமன்றோ!

"பெண் யார்? அவள் எப்படியிருக்கவேண்டும்?"

வள்ளுவர் வகுத்த அந்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்த பெண்ணன்றோ; பிரபாவதி தேவியார்!



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
அவர்கள்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

அதிகாரம்: 6 வாழ்க்கைத் துணைநலம் பாடல்: 56

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே..

விசாகனை வேண்டும் வடலூர் வள்ளல் – தமிழாகரர் தெ முருகசாமி புதுச்சேரி 5
தொண்டர்தம் பெருமை – க.சுகுமாரன் மன்னார்குடி 8
பசித்திரு, தனித்திரு, விழித்திரு – அரங்க, இராமலிங்கம் 10
தவத்திரு ஆறுமுக நாவலர்வாழ்க்கைக் குறிப்புகள் 13
கடன் தொல்லை தீர்க்கும்
திருச்சேறை செந்நெறியப்பர் – பனையபுரம் அதியமான் 17
அருள்மிகு பாரத்வாஜேசுவரர் ஆலயம் 22
உலகம் உய்ய உதித்த உடையவர் – பெ.ராமநாதபிள்ளை 26
பத்துகொலாம் அடியவர் செய்கை – பூசை.ச ஆட்சிலிங்கம் 30
பிறர் பொருள் எட்டி – திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (நினைவலைகள்) 32
காரமடை அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் 37

திருத்தணி முருகா வழித்துணை வருவாய்

விசாகனை வேண்டும் வடலூர் வள்ளல்

முருகப் பெருமானுக்கு விசாகன் என்ற தோர் பெயரும் உண்டு, முழுநிலா காயும் வைகாசித் திங்கள் விசாகத்தன்று அவனது அவதாரம் நடந்ததால் விசாகன் என்ற காரணப் பெயர் அமைந்தது.

1008 அண்டங்களையும் ஆண்ட அசுரேந்திரன் என்னும் சூரபதுமனின் கொட்டம் அடங்க வேண்டிச் சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து ஒளிப்பிழம்பாய் அவதரித்தவன் முருகன். ஞான ஒளியிலிருந்து ஞானச்சுடர் தோன்றுமது போல் முருகனது அவதாரம் பேரொளிப் பிழம்பாக விசாலப்பட்டதால் அவன் விசாகன் எனப்பட்டான். இதற்கான காரணத்தைக் கந்தபுராணம் கூறுகிறது.

தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பந்தந்த சூரபதுமனின் ஆணவத்தை அடக்க தேவர்கள் வேண்டிக் கொண்டபடி சிவபெருமான், தன் ஐந்து முகத்தோடு கீழ் நோக்கிய அதோ முகத்தைத் துலங்கச் செய்ய தன் நெற்றிக் கண்ணைத் திறந்து அறு சுடர்களைத் தோற்றுவித்தார். அச்சுடர்களின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய யாவரும் ஓட, சிவபெருமான் அச்சுடர்களைத் தன் அருகில் வரச்செய்து 'வாயுதேவன் மூலம் அக்கினி பகவானிடம் கொடுத்துக் கங்கையில் சேர்க்கச் சொன்னார். அவ்வாறே செய்ய கங்கை அச்சுடர்களை இமயாசலத்திலுள்ள சரவணப் பொய்கையில் கொண்டு சேர்க்க அங்குள்ள ஆறு தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாக அச்சுடர்கள் பிரகாசித்தன.

குழந்தையின் அழகையும் அழுகையையும் கண்ட ஆறு கார்த்திகைப் பெண்கள் இவை தெய்வக் குழந்தைகள் என எண்ணிப் பாலூட்டினர்.

இஃதறிந்த பார்வதி தேவி ஆறு குழந்தைகளையும் ஒருசேர அணைத்து ஓர்உருவாக்கினார். உடல் ஒன்றாய் முகம் ஆறாய் சேர்த்தணைத்ததால் (உருவானதால்) கந்தன் எனப் பெயர் கொண்டான் முருகன். இந்தக் குறிப்பின் திருநாளே விசாகத் திருநாள்.

"அந்திக்கு நிகர்மெய் அண்ணல்
அருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குத் தனது தொல்லைத்
திருமுகம் ஆறுங் கொண்டான்"

என்கிறார் கச்சியப்பர். இத்தகு முருகனது அவதார நாளில் கோடை வெயில் கொளுத்தும் வைகாசித்திங்களில் அவனுக்குக் குடங்குடமாகப் பாலபிஷேகம் செய்து அவனைக் குளிர்விக்கும் விதமாக விசாகத்திருநாள் எல்லா முருகனது ஆலயங்களிலும் நடைபெறும், பால் அபிஷேகம் செய்து சின்னக் குழந்தையாம் முருகனது சேவடிபற்றினால் பால்போல் பவ்வேறு நலங்கள் பெறலாம் என்பது நம்பிக்கையாகும். அந்த அடிப்படையில் நினைத்ததை அருள வல்ல முருகப் பெருமானிடம் பல அருளாளர்கள் பற்பல வேண்டிப் பலன் பெற்றனர். அவர்கள் வரிசையில் வடலூர் வள்ளலாரும் ஒருவர்.

–தமிழாகரர் தெ. முருகசாமி புதுச்சேரி

வள்ளலார் பாடிய தெய்வ மணி மாலை என்பது சிங்காரச் சென்னையாம் திரு நகரில் குடிகொண்டிருக்கும் முருகப் பெருமானை வேண்டிப் பாடிய பக்திப் பாடலாகும். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் கந்தப் பெருமானுக்கு ஆராதனை நடக்கும் காலத்தில் மணி ஒலிப்பது போல, மும்முறை "மணி மணி என்ற சொல்லமைய" தண்முகத்துய்ய மணி யுண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே எனப்பாடுகிறார். இது ஆன்மா தன் ஆனந்தமான உள்ளப் புலப்பாட்டை மணி மணியாக உணர்த்துவதான குறிப்பாக உள்ளது. மேலும் இப்பாடல்கள் முழுவதும் ஓர் ஆன்மாவின் குரலாகவே இராமலிங்கரால் பாடப்பட்டுள்ளது எனலாம்.

வடலூரார் உடலோடு கூடிய உயிர் வாழ்க்கையை வெறுத்தாலும் அறிவோடு கூடியிருக்கும் ஆனந்த வாழ்வையே வாழ விரும்பினார். முருகன் பேரொளிப் பிழம்பானவன், அவ்வொளி படுதலால் மனித வாழ்வு ஒளிபெறும். சூரிய ஒளி பொருளில் படுவதால் கண்ணுக்குப் புலப்படுவதுபோல முருக ஒளியைப் பெற வேண்டுகிறார்.

ஞான உருவோங்கும் உணர்வில் நிறை ஒளி ஓங்கி ஓங்குமயில் ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும் உறவோங்கும் நின் பதம் என் உளமோங்கி வளமோங்க உய்கின்ற நாள் எந்தநாள்.

இது அவரின் ஞான ஒளி பெற வேண்டி விண்ணப்பித்த விருப்பமாகும். இதனால் முருகனை வழிபடுவோர் எல்லாம் பெறுவர் என்பது அவரது நம்பிக்கை.

ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற என்ற பாடல் மிக்க புகழுடைய ஒன்றாகும். இப்பாடலில் வேண்டும் வேண்டும் எனப்புலப்பட வேண்டும் என்பதற்கேற்பவும் இதனைப் படிப்போர் புதிய ஊக்கத்தைப் பெறுவதற்கேற்பவும், காலத்திற்கேற்பப் பல புதிய சிந்தனைப் பதிவுகள் இப்பாடலில் உள்ளன.

"ஒருமையுடன் நினது திரு மலரடி
நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று
பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேச
வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான
பேய் பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே
வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதி
வேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழ
வேண்டும்."

இப்பாடலின் வேண்டுதலில் முருகவழிபாட்டை வற்புறுத்தும் குறிப்பை வள்ளலார் முதலில் குறிப்பிடுகிறார். அருட்பாப் பாடல்களில் பெரும்பாலான தில்லைப் பொதுவில் நடமிடும் நடராசனை மையப்படுத்தியே பாடுவதாக உள்ளன. ஆனாலும், "நான் கொண்ட விரதம் நின்னடியலால் பிறர் தம்மை நாடாமையாகும்" என முருகனைப் பாடுவதால் சிவனும் முருகனும் ஒன்று என்பதை வள்ளலார் தெய்வ மணிமாலை மூலம் குறிப்பிடுவது தெரிகிறது. இதனால் முருகவழிபாட்டிலிருந்து விடாத உறுதியை வேறொரு பாடலில் கூறும்போது, "எள்ளளவும் இம்மொழியிலேசு மொழியன்று உண்மை, எனையாண்டருள் புரிவாய்" என வேண்டுகிறார். அதனால் தான் தன்னை ஒத்த முருகனடியாரது உறவை விரும்புவதால் சிவன் வேறு முருகன் வேறு என நினைக்காத ஒருமைப் பாட்டுடைய முருகப்பக்தரது உறவை வள்ளலார் வேண்டுகிறார்.

இன்றைய மனித வாழ்வில் போலித்தனங்கள் மலிந்துவிட்டன. அதனால் தன்னை அப்போலிமையால் நலியாதபடிக் காக்க வேண்டினார். 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்' என்ற புறநானூற்றின் கருத்துப்படிப் பொய் நீங்கிய மெய்யை வேண்டினார். இன்னாதம்ம இவ்வுலகம்

இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே என்ற சங்கப் புலவரின் பெருவிருப்பைப் போல இவ்வுலகின் தீமை நீங்கிய நன்னெறி வாழ்வு வேண்டும் என வேண்டுகிறார். 'மதம் ஒரு அபினி' என்று சிலரின் கோட்பாடு அதாவது மூட பழக்கவழக்கங்கட்கு வாழ்வளிப்பது மதம் என்ற கருத்து உண்டு. ஆனாலும் பகுத்தறிவற்ற நிலையில் மதக் கொள்கையைப் பக்குவமாகப் பகுத்துணர்வோடு பயன்படுத்த விரும்பிய வள்ளலார் மத நல்லிணக்க உணர்வை வேண்டினார்.

மனித வாழ்வைச் சீரழிக்கும் காமந்தக வாழ்வை வெறுத்துச் சாடினார். இல்லறத்தை வெறுத்தாரில்லை. அதாவது மருவு பெண் ஆசையை மறக்கவே வேண்டும். எனப் பாடியதற்குப் பின்னர் தான் இராமலிங்கருக்குத் திருமணம் பேசி முடிக்கப்பட்டதாக வரலாறு உள்ளதால் சிற்றின்பமான இல்லறத்தை வெறுத்தார் என்பது கருத்தன்று. மனித வாழ்வை மிக எளிதில் சீரழிக்க வல்லதாகிய கழிகாம நிலையை வெறுக்க வேண்டும். என்ற அறிவுறுத்தலை வற்புறுத்துவதற்காகவே வள்ளலார் வேறெந்த இடத்திலும் பயன் படுத்தாத ஏகாரக்குறிப்பை அதாவது மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும் என்று கூறாமல் "மறக்க வே வேண்டும்" என்றதை நுட்பமாகக் கூறினார். அவர் பெண்ணாசையை ஒழிக்கக்கூறியது கழிபேரின்பமாகிய காமத்தை என உணர்தல் வேண்டும் என்பதால்தான் "நிராசையாம் உயர்கலப்பெண்டிரோடு வாழ்வும் காந்தமாம் புதல்வர்களுடன் வாழ்வும்" தாம் விரும்புவதாகத் தத்துவநிலையில் தெய்வ மணி மாலையில் வரம் வேண்டுகிறார்.

எல்லாவற்றிற்கும் காரணமாகிய முருகனே உன்னை என்றும் மறவாமை வேண்டும் என்கிறார் வள்ளலார். இது ஓர் முக்கிய வேண்டுதலாகும். ஏனெனில் மறத்தல் என்பதால் விளையும் தீமைகள் ஏராளமாகும். வள்ளுவர்,

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

என்கிறார். எனவே மறவாமை என்பது மனிதனுக்குத் தேவைப்படும் முக்கிய ஒன்றாகும். வாழ்க்கைக்கு அறிவே இன்றியமையாதது. எனவேதான் மதிவேண்டும் என்றார். மதியால் இவ்வுலகியலில் நிதியுடன் வாழ்ந்தாலும் அது நிரந்தரமன்று என்பதால் முருகனே நின் கருணையே வேண்டும். அதுவே அழியாத நிதி என்பதால் நின் கருணை நிதி வேண்டும் என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக வேண்டும் போது நோயற்ற தன்மையை வேண்டுகிறார். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதால் அடிப்படையாக உள்ள பொருளாதார வாழ்வினும் அருளாதார வாழ்வுடன் வாழ அவற்றை யெல்லாம் அனுபவிக்க நோயற்ற வாழ்வே சிறந்தது என்பதால் அதனை முத்தாய்ப்பாக வேண்டுகிறார்.

ஆக வள்ளலாம் அருட்பிரகாசர் ஒருவிளக்கு பல விளக்குகளை ஏற்றும் என்ற விதிப்படி முருகப்பெருமான் விசாகன் சிவபெருமானாம். பேரொளிப் பிழம்பினின்றும் தோன்றியதால் அவனின் அருட்பிரகாசத்தைப் பிரசாதமாகப் பெற விழையும் பாடலாகத் தெய்வ மணிமாலையைத் தந்தார் எனலாம். ஒளி பொருந்திய பௌர்ணமி நாளில்தான் எல்லா மாதங்களின் சிறப்புகளும் அமைவதால் திருக்கோயில்களில் ஒவ்வொரு பௌர்ணமியும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. அவற்றுள் நம் வைகாசி விசாகம் சிறப்புக் குறியதாகும்.

புத்தபகவானின் ஞான வாழ்விற்கு இந்த விசாகமே உகந்த நன்னாளாக உள்ளதென்பதை மணிமேகலைக் காப்பியத்தாலும் உணரப்படுவதால் வைகாசி விசாகனை வேண்டிநீராடும் பேறு பெறுவோமாக. கயிலையில் ஞான ஒளியாகச் சிவனது நெற்றிக் கண்ணில் பிறந்த முருகன் திருச்செந்தூரில் அஞ்ஞான இருளான அசுரனைத்தடிந்து ஞான வெளிச்சத்தை உண்டு பண்ணியதால் அந்தப் பொருத்தத்தைக் காட்டவே அருணகிரிநாதர் "கயிலை மலையனைய செந்தில் பதி வாழ்வே" என விசாகப்பெருமானை வணங்குகிறார் எனலாம்.

தொண்டர்தம் பெருமை

தொண்டர்களுக்கே பெரும் சிறப்பு உண்டு என்பது இந்து சமயக் கருத்து.

தொண்டர், பக்தர், அடியவர், அன்பர், தொழும்பர் என்பன ஒரு பொருட்சொற்கள்.

தொண்டு செய்வதால் தொண்டர் எனப்படுவர். பக்தி செய்வதால் பக்தர் எனப்படுவர். ஆண்டவனுக்கு அடிமை செய்வதால் அடியவர் எனப் படுவர். இறைவனுக்கு அன்பு செய்வதால் அன்பர் எனப் படுவர். தொழும்பு (அடிமை) செய்வதால் தொழும்பர் எனப்படுவர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதுவே தொண்டர்களின் குறிக்கோள். தொண்டர்களுக்குத் தொண்டு செய்வது தவிர, வேறெதுவும் செய்ய வேட்கை இருக்காது.

தொண்டர்கள் நம் நாட்டில் வழி வழியாக பழங்காலந் தொட்டே இருந்து வந்துள்ளனர். "வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்" என்பார் வள்ளலார். நம் சமயம் உலகிலேயே சிறப்புற்றோங்குவதற்குக் காரணம் தொண்டர்களின் பெருமையே ஆகும்.

சைவ சமயத்தைச் சார்ந்த தொண்டர்கள் பலர் எனினும், அறுபத்து மூவரைச் சிறப் பாகக் குறிப்பர். சிவனடியார், நாயன்மார் எனப்படுவர். வைணவ சமயத்தைச் சார்ந்த தொண்டர்களும் பலர் எனினும் பன்னிருவரையே சிறப்பித்துப் பேசுவர். வைணவ அடியார் ஆழ்வார் எனப்படுவர். பக்தி எனும் கடலில் ஆழங்கால் பட்டதனால் ஆழ்வார் எனப்பட்டனர்.

சைவ அடியார்களின் வரலாற்றை விளக்கு தற்கென்று உள்ள புராணம் திருத்தொண்டர் புராணம். செயற்கரிய செயல்களைச் செய்த பெரியோர்களின் வரலாற்றைக் கூறுவதால், இது பெரிய புராணம் எனஅழைங்கப் பெறும். பெரிய புராணம் எனும் சிறப்பு திருத்தொண்டர் புராணத்துக்கு மட்டுமே உண்டு.

பெரிய புராணத்தில் உள்ள திருக்கூட்டச் சிறப்பில் ஆறு பாடல்கள் தொண்டர் தம் சிறப்பைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன. அவற்றுள் இரு பாடல்களை மட்டும் சான்றுகளாகக் குறிப்பிடல் சாலும் எனக் கருதுவம்.

''பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள்மறப்பிலார்
ஓதுகாதல் உறவப்பின் நெறி நின்றார்
கோதி லாத குணப் பெருங் குன்றனார்
கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."

–7, 8, திருக்கூட்டச் சிறப்பு. – பெரிய புராணம்.

கடவுளைக் கும்பிடுவதைத் தவிர, அடியார்கள் வேறு ஒன்றையும் வேண்டுதல் செய்யார். எனவே தான், அடியார்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

ஆழ்வார்களுள் பெரியவராகிய பெரியாழ்வார் தன்னை 'அடியவன்' என்று சொல்லிக் கொள்வதையே பெருமையாகக் கருதுகிறார். 'நானும் உனக்குப் பழவடியேன்!' என்பது பெரியாழ்வார் வாக்கு!

''தன் அடியவரிடத்தில் திருமாலுக்கு அசைக்க முடியாத நல்லெண்ணம் இருக்குமாம்! தன்னடியவர் தீமை செய்யார்!

(க.சுகுமாரன் மன்னார்குடி)

செய்தாலும் அது நன்மைக்கே!" என்பது திருமாலின் நம்பிக்கையாம்! எனவே தான், அடியாரிடத்து அன்பு காட்டும் அரங்கன் மீது அளவற்ற பக்தி கொண்டு ஆளாகிவிட்டாராம் ஆழ்வார்! தலைவனின் நம்பிக்கையைப் பெறும் அடியார் பெரியார் தானே!

"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகு ரைக்கு மேல்
என்னடியார் அது செய்யார்
செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்!
மன்னுடைய விபீடணற்கா மதிலி
லங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கற் கன்றியும்
மற்றொருவர்க் காளா வாரே!"
– பெரியாழ்வார்

மெய்யடியார்கள் இறைவன் நாமத்தையே எப்பொழுதும் உச்சரிப்பர்; ஆடுவர்; பாடுவர்; அவ்வடியார் கூட்டத்தைக் காண்பவர் கண்களே புண்ணியம் செய்த கண்கள், தற்காலத்தும் திருவிழா போன்ற சிறப்பு நேரங்களில் மெய்யடியார்கள் உடலெங்கும் சமயச் சின்னங்களை அணிந்து ஆடிப் பாடிப் பஜனை செய்வதைக் கண் குளிரக் கண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இறைவனைக் காண முடியாத நம் கண்கள் அவனடியாரைக் கண்டு ஆனந்திக்கின்றன. கண்கள் செய்த புண்ணியம் தான் என்னே!

தொண்டர்கள் இறைவனுக்கும் தொண்டு செய்வர். தம் போன்ற அடியவர்க்கும் தொண்டு செய்வர். வைணவ அடியார்களுள் ஒருவர் தொண்டரடிப் பொடியாழ்வார். இவர் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் திருமாலைக் கண்டது போலவே மகிழ்வார்; அவர்களின் திருவடிகளுக்கு தொண்டு செய்து மகிழ்வார்; அதுவே சிறந்த பேறு எனவும் கருதுவார்.

எனவேதான் இவருக்குத் தொண்டரடிப் பொடியாழ்வார் என்னும் பெயரே நிலைத்து விட்டது. விப்பிர நாராயணர் என்பது அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர். தொண்டர்களின் திருவடிப் பொடியைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, தொண்டு செய்து உயர்ந்ததால் இவரை 'அன்பர் தாள் தூளி' என வைணவ உலகம் அகங்கனிந்து அழைக்கும்.

தொண்டு செய்வார்க்கு என்றும் பெருமை உண்டு. தொண்டர்க்கு தொண்டு செய்ய மட்டுமே தெரியும். தொண்டு செய்யும்போது கைம்மாறு கருதார்.

செயற்கரியவும் செய்வர்; செயற்குரியவும் செய்வர். சைவ சமயமும் வைணவ சமயமும் தொண்டர்களின் பெருமையைப் பலவாறு விவரித்துக் கூறும். வைணவ அடியார்களின் பெருமையைப் பாகதவத்தில் பரக்கக் காணலாம்.

இறைவன் வேறு, தொண்டர் வேறு என்று கருதும் கருத்து இந்து சமயத்துக்கு உடன்பாடன்று. இறைவனைப் போலவே, தொண்டரையும் மதிக்க வேண்டும்; மதித்துத் துதிக்க வேண்டும் என்பதே இந்து சமயக் கருத்து. அமிழ்தினும் இனிய தெய்வத் தமிழ்ப் பாக்களை அவனிக்களித்த ஔவைப் பாட்டியின் தேன்தமிழ்ப் பாடல் ஒன்று தொண்டர் தம் பெருமையை விளக்கும் பாங்கினைக் காண்போம்.

'தொண்டர் தம் பெருமையே பெருமை! என்று முருகப் பெருமானிடமே எடுத்துக் கூறும் இனிய பாடல் இதோ;

"பெரியது கேட்கின் எரிதவழ்
வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது!
புவனமோ நான்முகன் படைப்பு!
நான்முகனோ கரியமால் உந்தியில்
வந்தோன்!
கரியமாலோ அலைகடல் துயின்றோன்!
அலைகடலோ குறுமுனி அங்கையில்
அடக்கம்!
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்!
கலசமோ புவியில் சிறுமண்!
புவியோ அரவினுக்கு ஒருதலைப்
பாரம்!
அரவமோ உமையவள் சிறுவிரல்
மோதிரம்!
உமையோ இறையவர் பாகத்து ஒடுக்கம்!
இறைவரோ தொண்டர் உள்ளத்து
அடக்கம்!
தொண்டர் தம் பெருமை சொல்லவும்
பெரிதே!"
– ஔவையார்.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு

பசித்திரு, தனித்திரு, விழித்திரு எனும் தாரக மந்திரத்தை வடலூர் வள்ளற்பிரானாகிய இராமலிங்க அடிகள் முதன் முதலில் மக்களுக்குப் போதித்தார். அதன் பின்னர் அருளாளர்கள் பலரும் இதனை எடுத்தியம்ப முற்பட்டனர்.



ஆன்மீக நாட்டம் கொண்டோர் அதாவது இறைவனது திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும் என நினைப்போர் பசித்திருக்க வேண்டும். தனித்திருக்க வேண்டும். விழித்திருக்க வேண்டும் எனப் பொருள் கூறப்பெறுகிறது. இவ்வாறு பசித்து, தனித்து, விழித்து இருந்தால் பதவி கிடைக்கும். அதாவது சிவபதவியோ, வைகுண்ட பதவியோ கிடைக்கும். எனவும் கூறப்பெறுகிறது. இவ்வாறு இருந்தவர்கள் இப்பதவிகளைப் பெற்றார்களா என்றும் தெரியவில்லை. சிவலோகமோ, வைகுண் டமோ செல்லும் வாய்ப்பு இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. அதனால் இப்பதவிகளைப் பெற்றவர்களைப் பற்றி எம்மால் கருத்துரைக்க இயலவில்லை. இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். தொடங்கிய பிரச்சனைக்கு வருவோம். பசித்திரு, தனித்திரு, விழித்திரு எனும் சொற்களுக்குரிய உண்மைப் பொருளை உணர முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பசித்திரு

பசித்திரு என்றால் பட்டினி கிடப்பது அன்று. **"லங்கணம் பரம அவுஷதம்"** என்பார்கள். வயிற்றைக் காயப்போடுதல் மிகச்சிறந்த மருந்து என்பார்கள் சித்த ஆயுர்வேத மருத்துவர்கள். ஆனால் மேல்நாட்டு மருத்துவம் இக்கோட்பாட்டினை ஒத்துக் கொள்வதில்லை. இது மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட செய்தி. இல்லாமையினால் பட்டினி கிடப்பதற்கும் எல்லாம் இருந்தும் உண்ணாமல் நோன்பு நோற்பதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. இது உடலைப் பொருத்த விஷயமன்று. உணர்வைப் பொருத்தது; மனத்தின் ஆளுமையில் அடங்குவது. எண்ணங்களின் தொகுதிதான் மனம். ஏதும் இல்லாமையால் பட்டினி கிடப்பது இறப்பிற்குச் சமம். எல்லாம் இருந்தும் புலன் அடக்கி, உணர்ச்சி அடக்கி, உணர்வு விழித்து உயிர் தழைக்க இருக்கும் நோன்பிற்குப் (விரதம்) பெயரே உண்ணா நோன்பு. இதுவே பசித்து இருத்தல். இவ்வாறு இருத்தல் உடலுக்கு நல்லது. ஊனுடம்பு ஆலயம். உடல் நலமானால் உள்ளம் வளமாகும். உள்ளம் வளமானால் உயிர் தளிர்க்கும்; தழைக்கும். பசித்திருத்தல் உடல் தொடர்புடையது. இந்நிலை உடலுக்கு நன்மை பயக்கும் எனக் கருதி ஒருவர் நாள்தோறும் பசித்திருக்கும் அறமாகிய உண்ணா நோன்பினை மேற்கொள்கிறார் என்று வைத்துக்கொள் வோம். அவர் உடல்நிலை என்னாகும்? விரைவில் உடல் அழிந்து போகும். இவ்வாறு உடலை அழித்துவிடும் ஒன்றையா பெரியோர்கள் கூறியிருப்பார்கள்? பின் இதன் உண்மைப் பொருள்தான் என்ன?

குருபிரான் தொட்டுக்காட்டாத வித்தை கைவசம் காது. குருபிரான் வழி செவிச் செல்வத்தைப் பெறாதவர்கள் ஆன்மீகத்தில் அதன் எல்லையை அடைய முடியாது. குருபிரான் தயவின்றி நடுக்கண் புருவப்பூட்டுத் திறக்காது. எனவே குருவே சிவம்: சிவமே குரு. மெய்வழிச் செல்லும் மெய்க்குருபிரான் முன்னிலையில் சீடன்

-அரங்க.இராமலிங்கம்.

இருக்கும் போது பசித்திருக்க வேண்டும். ஏனெனில் குருபிரான் ஞானச் செல்வத்தினை வாரி வாரி வழங்கும் போது அதனைச் செவி வாயாக, நெஞ்சுகளனாகக் கொள்ளுவதற்கு உடல் பசித்திருக்க வேண்டும். பசித்திருந்து ஞானத்தைக் கேட்க வேண்டும். உடல் தளர்ச்சியுறாமல் இருக்க அரைவயிறு உண்டால் போதும். அப்பொழுதுதான் புலன்கள் விழிப்போடும் ஒருமைப்பட்ட மனத்தோடும் ஞானச் செல்வத்தைச் செவி மடுக்கும். எனவே பசித்திருத்தல் என்பது இல்லாமையினால் பட்டினி கிடப்பது அன்று. சில குறிக்கோள்களை முன் வைத்து உண்ணா நோன்பு இருத்தலும் அன்று.

குருபிரான் முன்னிலையில் ஞானச் செல்வத்தைச் செவிவழி அருந்திட ஞானப்பசி மீதூர உடல்பசி மறந்து வாய் மூடி இரு செவி திறந்து கேட்டிருக்கும் நிலையே பசித்திருத்தல். குருபிரான் முன்னிலையில் ஞானப் பசியோடு இருத்தலே பசித்திருத்தல். அது என்ன ஞானப்பசி? பசித்திருத்தல் என்றால் வயிற்றைக் காலியாக வைத்து இருத்தல் போல் ஞானப்பசியோடு இருப்பவர் தம் உள்ளத்தைக் (மனம், நெஞ்சம், மூளை எனப் பெயரில் தான் வேறுபாடு) காலியாக வைத்திருக்க வேண்டும். இதுவரை தாம் படித்தவை, கேட்டவை உணர்ந்தவை இவற்றால் உள்ளம் நிரம்பி வழியும். கடவுள் பற்றியும், மெய்யறிவு பற்றியும் பல்வேறு கற்பனைகளை உள்ளம் உருவாக்கி வைத்திருக்கும். இந்த உள்ளத்தோடு ஞானத்தைப் பெற முடியாது. மெய்க் குருபிரான் மெய்யாகிய அறிவு மாணிக் கத்தைக் காட்டித் தருகிறபோது இதுவரை மன அறிவால் படித்தவை, கேட்டவை உணர்ந்தவை அனைத்தும் மெய்யைக் காண, அறிய, உணரத் தடையாக அமையும். எனவேதான் யதார்த்த உள்ளத்தோடு (OPEN MIND) செவி மூலமாக ஞானத்தைப் பருக (கேட்க) வேண்டும். குழந்தை மனம் என்பதும் இதுவே. பசித்திருக்கும் ஞானப் பசியும் இதுவேயாகும்.

தனித்திரு

தனித்திருத்தல் என்பது தனியே இருத்தல் எனப் பொருள் கொள்ளப் பெறுகிறது. தனியே இருத்தலும், வாழ்தலும் அரிது. தனிமையில் வாழ்வதற்குத் திடமான மனநிலை வேண்டும். கட்டாயத்தின் பேரிலோ. சூழ்நிலை காரணமாகவோ ஒருவர் தனிமையில் தனித்து வாழ்ந்தால் அவர் மனநிலைக் கோளாறுக்கு ஆட்படுவார் தனித்து வாழ்தல் எளிய செயலன்று.

தனித்திரு என்றால் காட்டிலோ அல்லது நாட்டிலோ தனித்திருந்து கடுந்தவம் மேற்கொண்டு இறைவனைக் காண அல்லது அடைய முயற்சி மேற்கொள்வது எனத் தவறாகப் பொருள் கொள்ளப் பெறுகிறது. தனித்திருக்க, தனிமையில் மனம் மருளுமே ஒழிய இறையருள் தெரியாது.

எனவே தனித்திருத்தல் என்பதன் பொருள் மெய்க்குருபிரான் முன்னிலையில் வேறு நினைவுகளின்றி தனித்திருந்து, ஞான உபதேசம் பெற வேண்டும் என்பதே. ஞானச் செல்வத்தை வழங்கும் குருபிரான் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வழங்க மாட்டார். அவரவர் தகுதிக்கேற்ப அவரவர் முன்வினைப் பயனுக்கேற்ப அவரவர் கொள்ளும் திறனுக்கேற்ப செவிச்செல்வத்தை வழங்குவார். அதனால் தகுதியுள்ள சீடன் குரு பிரானைச் சந்திக்கும் போதெல்லாம் ஏகாக்ர சித்தனாய், குருபிரான் அவர்களை அணுகி ஞானச் செல்வத்தைச் செவிவாயாக நெஞ்சு களனாகப் பெற்று மகிழ்வான்.

ஒருமைப் பட்ட மனத்தோடு. பிற சிந்தனைகள் ஏதுமின்றி ஏகாக்ர சிந்தனை யோடு குருபிரானிடம் ஞானம் கேட்டலும் பின் கேட்டவற்றைத் தனித்திருந்து உணர்ந்து உணர்ந்து பரமானந்தம் அடைதலும் சீடனுக்கு உரியது. இதுவே தனித்திருத்தல் என்பது. குருபிரானோடும் அவர் உபதேசித்த ஞானத்தைச் சிந்தித்து உணரவும் இருத்தலாகும்.

விழித்திருத்தல்

ஆன்மிக நாட்டம் கொண்டோர் இரவெல்லாம் விழித்திருந்து சிந்தையை அடக்கிச் சும்மா இருந்து தவம் மேற்கொண்டு இறைவனை அடைய முற்பட வேண்டும் என்றும், இவ்வாறு இரவெல்லாம் விழித்திருந்து இறைவனை அடைய முயல்வதே விழித்திருத்தல் என்றும் பலர் கூறுகின்றனர். பத்து நாள்கள் தொடர்ந்து ஒருவர்

விழித்திருந்தால் உடல் சூடாகி பல் பிணிக்கும் இடமாவதன்றி அவர் மன நோயாளியாகியும் விடுவார். மனநிலை சரியில்லாதவரின் முக்கிய அறிகுறியே உறங்காமை ஆகும்.

விழித்திருத்தல் என்பது குருபிரான் முன்னிலையில் விழிப்போடு விழித்திருத்தல் ஆகும். ஞானச் செல்வத்தை வழங்கும் குருபிரான் முன்னிலையில் ஏனைய புலன்களின் கதவை அடைத்து உள்ளத் தாமரையில் இருக்கும் இருதய வாசலைத் திறந்து வைத்து விழிப்போடு விழித்திருக்க வேண்டும். விழி மூடாமல் இரு கண் திறந்து குருபிரானைக் கண்டு கொண்டே இருக்க வேண்டும். குருபிரானும் தம் திரு ஆலவாய் வழியாக ஈரேழு பதினான்கு உலகத்தையும் காட்டிக் கொடுத்து தம்முடைய விஸ்வரூப தெரிசனையையும் கண்ணபிரான்போல் காட்டிக் கொடுப்பார். இதுவரை சீடன் கேட்டிராத திருவாய் மொழிகளை அருளமுதமாக வழங்குவார். இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே என்ற பாடலடியின் உண்மைப் பொருளைச் சீடன் அப்பொழுது தான் உணருகிறான். இவ்வாறு குருபிரான் வழங்கும் செவிச்செல்வத்தை ஒரு செவியில் விழிப்போடு விழித்திருந்து கேட்க வேண்டும்.

உபதேசங்கள் அனைத்தும் இரவில்தான் நடக்கும். அதுவும் பௌர்ணமி இரவு மிக முக்கியம். அந்த இரவில் விழிப்போடு விழித்திருந்து ஞானச் செல்வத்தைச் செவிமடுத்தும் குருபிரானைப் பார்த்துப் பார்த்துப் பருகினால் புருவப்பூட்டு எனும் நெற்றிக்கண் திறக்கும். இரு கண்மலர் விழித்திருக்க, விழித்திருக்க உபநயனமாகிய மூன்றாவது கண் திறக்கும். இயற்கையாக மூடிக் கிடக்கும் நெற்றிக் கண்ணின் விழி திறக்க வேண்டுமானால் குருபிரான் முன்னிலையில் இரு விழி திறந்திருக்க வேண்டும். இதுவே விழித்திருத்தலாகும்.

இறுதியாக ஒரு சொல்

பசித்திரு, தனித்திரு, விழித்திரு எனக் கூறப்பெற்ற மறை பொருள் குருபிரானோடு இருக்கும் சீடனுக்கு உரியது. குரு பிரானோடு ஒட்டி, உறைந்து வாழும் சீடனுக்கு அருளப்பெற்ற அருளுரை, குருபிரானோடு இருக்கும் போது அரை வயிறு உண்டு பசித்திருக்க வேண்டும். ஞானப்பசியோடு இருக்க வேண்டும். வேறு எந்தப் பசியும் (ஆசையே பசிதானே! உயிர் உள்ளவரை ஆசையும் நிறைவடையாது: பசியும் நிறைவடையாது) இருக்கக் கூடாது. குருபிரானோடு இருக்கும்போது மண்ணாசை. பொன்னாசை. பெண்ணாசை புகழாசை இன்ன பிற ஆசைகளையெல்லாம் சுற்றமாகச் சேர்த்துக் கொண்டு இராமல் ஆசைப் பேய் களை விரட்டிவிட்டு ஏகாக்ர சிந்தையோடு (எண்ணத்தோடு) தனித்திருந்து ஞானத்தைப் பெற வேண்டும்.

உடலினுள்ளே உள்ளத்தில் குடியிருக்கும் உயிர் ஐம்பொறிகள் வழியாகப் பிரபஞ்ச அறிவைப் (அனுபவத்தை) பெறுகிறது. இதில் *83.3%* விழுக்காடு கட்புலன் வழியாகவும் *12.2%* விழுக்காடு செவிப்புலன் வழியாகவும் ஏனைய மெய், வாய், மூக்கு, வழியாக *4.5%* விழுக்காடும் அனுபவ அறிவினை மூளை பெறுவதாக இன்றைய அறிவியல் ஆய்வு அறிவிக்கிறது. எனவே கட்புலனாகிய இருவிழிகள் உலகியலறிவு பெறுவதற்கும் மெய்யறிவு பெறுவதற்கும் மூலம். இதுவே ஆதி மூலம். எனவேதான் இந்த இருவிழி திறந்து விழிப்போடு விழித்திருந்து மூன்றாவது விழியைக் குருபிரான் தயவினால் (முக் கண்ணனைக் காணுதல்) விழிக்கச் செய்தவர் இருவிழி பெற்றதன் பயனைப் பெற்றவராவர். இதுவே விழித்திருத்தல். அறிந்தவர் அறிக. ஆர்வலர் அறிவார் அரனை.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே (139)"

எனக் குருபரனின் பெருமையைத் திருமூலர்பிரான் தெளிவாகக் கூறியருளி யுள்ளார் . பசித்திருந்து தனித்திருந்து விழித் திருந்து குருபிரான் அருளால் மெய்யை உணர்ந்தவர்களே சித்தர்கள். உயிருடன் வாழுகின்ற பொழுதே சிவலோகத்தைக் கண்டு களிப்படைந்தவர்கள்.

குருபரன் முன்னிலையில் பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்தால் அனைவருமே சித்தராகி சிவலோகத்தையும் வைகுண் டத்தையும் உயிருடன் வாழும்போதே கண்டு, களிப்படையலாம். எங்கும் நாமே நிறைந் திருக்கும் உண்மையை உணர்ந்து உய்திபெறலாம்.

தவத்திரு ஆறுமுக நாவலர் வாழ்க்கைக் குறிப்புகள்

நாவலர் பெருமான் இலங்கையில் யாழ்ப்பாணத்தை அடுத்த நல்லூர் எனும் தலத்தில் அவதரித்தார். இவருடைய தாய், தந்தையர் கந்தர் – சிவகாமி தம்பதியராவர். இவர்கள் தோன்றிய குடி பாண்டிய நாட்டு மழவர் குடியான கார்காத்த வேளாளர் குடியாகும்.

தோன்றிய நாள் 1822 திசம்பர் 18க்கு இணையான சித்ரபானு ஆண்டு மார்கழித் திங்கள் அவிட்ட விண்மீனாகும்.

நாவலர், சரவண முத்துப் புலவரிடமும், சேனாதி ராயரிடமும் தமிழ் பயின்றார். பின்னர் பீட்டர் பார்சிவல் எனும் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றார். இவர் சிறந்த தமிழ் பணியாளராகத் திகழ்ந்தார். இவர் உத்தியோகத்தை விரும்பவில்லை

"நான் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும் அஃதுயில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வி துணை மாத்திரம் கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த போதும் அதை யான் விரும்பவில்லை. காரணம் சைவத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்."

எனக் கூறுவதைக் காண்கிறோம்.

இவர் இலங்கையில் – நல்லூர், கொழும்புத் துறை கந்தர் மடம், பருத்தித் துறை, மாதகல், இணுவில் ஆகிய ஊர்களில் சைவப் பிரகாச வித்தியாசாலைகள், சைவப் பிரகாச அச்சியந்திரசாலை.

தமிழகத்தில் –சிதம்பரம் மேலரத வீதியில் 1864ல் சைவப் பிரகாச வித்தியாசாலை, மாலைக்கட்டித் தெருவில் சைவ சித்தாந்தக் கல்லூரி ஞானப்பிரகாசர் குளத்தருகே சேக்கிழார் திருக்கோயில், சென்னையில் தங்கசாலைத் தெருவில் 1850ல் வித்தியாநுபாலன அச்சு இயந்திர சாலை ஆகியவற்றைத் தோற்றுவித்து அவற்றின் மூலம் சைவப்பணியும் தமிழ்பணியும் செய்தார்.

இவர் எழுதிய நூல்கள்:

இலக்கண வினா விடை (1865), இலக்கணச் சுருக்கம் (1873), கதிர்காம சுவாமி கீர்த்தனைகள் (1869), சிதம்பரமான்மியம் (1852), சைவ தூஷண பரிகாரம் (1854), சைவ வினா விடை–1 (1873), சைவ வினா விடை–2 (1873), திருவையாற்றுப் புராண வசனம் (1864), நித்திய கரும விதி (1876), பால பாடம்–1 (1850), பால பாடம்–2 (1860), பால பாடம்–4 (1865), பெரிய புராணம் வசனம் (1852) பெரிய புராண சூசனம் (1852, ஆகியவையாகும்.

மேலும் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் –1863, செந்தில் நிரோட்ட யமக அந்தாதி **உரையுடன் –1851,** திருமுருகாற்றுப்படை மூலமும் – புத்துரையும் –1851, நன்னெறி **மூலமும் உரையும்–1853,** நல்வழி **மூலமும் உரையும் –1863** முதலியவற்றிற்கு உரை வரைந்துள்ளார்.

இவர் பரிசோதித்து வெளியிட்டவை

இலக்குமி தோத்திரம், சரஸ்வதி தோத்திரம் விநாயக கவசம், சிவகவசம், சக்தி கவசம்

–1854, உவமான சங்கிரகமும் இரத்தினச் சுருக்கமும் –1866, கந்த புராணச் சுருக்கம்–1865, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி –1851, கொலை மறுத்தல்–1868, சூடாமணி நிகண்டு 1–12–1849, சேது புராணம் –1866, திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்–1861, திருச்செந்தூர்–அகவல் மூலம் –1860, திருவாசகம் மூலம்–1851, திருமுருகாற்றுப்படை– மூலம் –1850, தொல்காப்பியம் சொல்லதிகாரம் –சேனாவரையர் உரை –1869, நன்னூல் மூலமும் விருத்தியுரையும் –1851, நன்னூல் மூலமும் காண்டிகை உரையும் 1–3–1875, பிரயோக விவேகம் மூலமும் உரையும் –1868, பெரியநாயகி அம்மை திருவிருத்தம் –1867, புட்பவிதி மூலம் –1874, மகாபாரதம் ஆதிபர்வதம் மூலம் –1863, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை உடைய கந்த புராணத்தை பிழையற முதலில் அச்சிட்டது –1868 முதலியவையாகும் மற்றும் பல நூல்களை மூலங்களைப் பரிசோதித்து வெளியிட்டுள்ளார்.

இவர் பதிப்புகளும், நூல்களும் மிகச் சிறப்பானவைகளாகும்.

இவரைப் பற்றி கூறுமிடத்து, இவருக்கு தமிழில் இலக்கணமும், நன்றாக வரும். இலக்கியமும் நன்றாக வரும். தருக்கமும் நன்றாக வரும், பாட்டுப் பாடவும் நன்றாக வரும். இவர் சைவ சமயத்தைப் பற்றியும் நன்றாக அறிவார், மற்றைய புறச்சமயங்களைப் பற்றியும் அறிவார், சைவத்திலே ஞானகாண்டமும் நன்றாக வரும், கிரியா காண்டமும் நன்றாக வரும், இவர் தமிழிலும் மிக வல்லவர், சமஸ்கிருதத்திலும் மிக வல்லவர், ஆங்கிலத்திலும் வல்லவர், பேசவும் வல்லவர், எழுதவும் வல்லவர் என்று பலர் கூறியுள்ளனர்.

இவருடைய வசனம் முழுவதும் சுத்தமான செந்தமிழ் நடையேயாம். இவர் வேறு ஒரு பாஷையிலே நினைத்து மீளத் தமிழில் எழுதுபவர் அல்லர். தமிழிலே நினைத்துத் தமிழிலேயே எழுதுபவர். தமிழுக்கு அந்நியமான சில வடசொற்களே அன்றி வேறு பாஷை சொல் ஒன்றும் இவருடைய வசனங்களில் வந்ததில்லை. வசனங்களும் ஒன்றிற்கொன்று சம்மந்த[illegible]வனாய் வீண் சொற்களும், வீண் அடைகளும் இல்லாதனவாய் தர்க்க ரீதி உடையவனவாய் இன்னோசை உடையவனவாய் இருக்கும்.

பைபிளை தமிழில் மொழிபெயர்த்த பெருமை இவருக்கு உண்டு. பைபிளை மொழிபெயர்க்கும் காலத்தில் அதனையும், அதற்கு பூர்வாச்சாரியர்களாலே செய்யப்பட்ட உரைகளையும் நன்கு கற்றுக் கொண்டவர்.

சிறந்த சிவபூசா துரந்தரராக விளங்கிய இவர் சிறுவயதிலேயே சிவதீட்சை பெற்றுக் கொண்டார். 32ம் வயதில் நிர்வாண தீட்சை பெற்றும் ஆச்சாரியர் இடத்தில் ஸ்படிக லிங்க பூசையும், எழுந்தருளப் பண்ணி நியமமாகச் செய்து வந்தார். பூசைக் கிரமத்திலும் ஆசாரத்திலும் ஒரு காலத்திலும் இவர் தவறினதில்லை.

புறப்பூசையிலே தினந்தோறும் "உறவினேன் உனையன்றி மற்றடியேன்" என்றும் "ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே" என்றும் ''அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமுங் குன்றே அணையாய் எனையாட்கொண்ட போதே கொண்டிலையோ'' என்றும் "தோத்திரம் பண்ணும்போது கேட்டு நிற்பவர்களுக்கும் கண்ணீர் சொரியும், சமயாச்சாரியார் குருபூசைகளையும் இடையிடையே மாகேசுர பூசைகளையும் செய்து வந்தார். சிவராத்திரி சோமவாரம் கந்த சஷ்டி முதலிய விரதங்களையும் அநுட்டித்து வந்தார்.

மந்திரக் கிரியைகளோடு கூடிய நித்திய கரும விதி என ஒரு நூலும் செய்தார். தகப்பனார் தாயார் எனும் இருவருடைய வருஷ சிரார்த்தங்களையும் மிகச் சிரத்தையோடு செய்து வந்தார்.

வேதமும் சிவாகமும்:

"வேதம் சிவாகம் என்னும் இரண்டும் ஈசுர வாக்கு என்பதும் அவற்றுள்ளே வைஷ்ணவர், வேதாந்திகள், சாங்கியர், யோகர், மீமாஞ்சகர், நையாயிகமர் முதலிய பலர்க்கும் பொதுவாதலின் பொது நூல் என்பதும், சிவாகமம் சைவருக்கே உரியது. ஆதலின்

சிறப்பு நூல் என்பதும் இதில் சொல்லப்பட்ட சிவதீட்சையே முத்திக்குச் சாதனம் என்பதும் வேதம் உலகோர் பொருட்டும் ஆகமம் சத்திநிபாதம் உடையவர் பொருட்டும் செய்யப்பட்டன என்பதும் ஆதலின் வேதத்திலும் ஆகமம் சிறந்தது என்பதும் சிவாகமத்தில் சொல்லப்பட்ட பிரகாரமே சைவாலயங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே சைவ நூற்றுணிவு."

என்பன போன்று சிறந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். சிறந்த சைவ சித்தாந்தியாகவும் உயர்ந்த சிவபூஜா துரந் தரராகவும் விளங்கிய இவருக்கு திருவாடு துறை ஆதினம் நாவலர் என்றபட்டத்தை வழங்கியது. சைவத்திற்கு ஆற்றிய இவருடைய பணிகள் ஏராளமாகும். இவருடைய பணிகள் சைவ உலகிலும் தமிழ்கூறும் நல்லுலகிலும் தனியிடத்தைப் பெற்று ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன.

ஆறுமுக நாவலர் அறிவுரை:

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய் என்று நம்புகிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது பயன் பெறான். அந்தச் சமயத்திற்குரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும் அவரை வழிபடும் முறைமையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத போது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படும் சமயநூல் கல்வி கேள்வி இல்லாத போது அந்த அறிவு உதியாது. ஆதலால் கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

"வரலாறு பக்கம் – 43"

"கல்விக்குப் பயன் அறிவும் அறிவுக்குப் பயன் ஒழுக்கமும் ஆகும்" – பரிமேலழகர்

சைவ சமயிகள் தங்கள் சமயத்தை வரம்போடு கடைப்படித்து உய்வார்களாக.

ஆறுமுகநாவலர் முத்தி பெற்ற நாள்:

பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21ம் தேதி **(5.12.1879)** வெள்ளிக்கிழமை மக நட்சத்திரத்தில் முத்தி பெற்றார்.

இவரது நினைவுச் சின்னம்:

இவரது செப்புப் படிமத்தைச் சிதம்பரம் சேக்கிழார் கோயிலில் வைத்துப் பூசித்து வருகின்றனர். இஞ்ஞான்றும் கார்த்திகை மக நட்சத்திரத்தன்று எழுந்தருளச் செய்து மேலரதவீதியில் இவர் அமைத்துள்ள பாடசாலையில் வைத்து வழிபாடு செய்து குருபூசை விழா, மாகேசுர பூசை முதலியன சிறப்பாகச் செய்து வரப்படுகிறது. அன்று பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழின் விலை ரூ. 10/-
ஓராண்டு சந்தா ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா ரூ. 1500/-
(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) ரூ. 15,000/-
2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ. 10,000/-
3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ. 7,500/-
4. உட்புறம் முழுப்பக்கம் ரூ. 5,000/-
5. உட்புறம் அரைப்பக்கம் ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
என்ற முகவரிக்கு அனுப்பவும்

பொதுமக்கள் பார்வைக்கு

திருக்கோயில்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துகள் சம்பந்தமான ஆவணங்களை பதிவு(ம தடைசெய்வது குறித்து 1908-ம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் சட்டப்பிரிவு 22-(ஏ) யில் தமிழ் நாடு சட்டம் 2009-ன்படி திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள மேற்கண்ட சட்டத்திருத்தத்தின் விபரம் பின்வருமாறு:--

TAMILNADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

(NO: 34) CHENNAI, THURSDAY, FEBRUARY, 5, 2009

Thai 23,Thiruvalluvar Aandu- 2040

Part-IV- Section 2

Tamil Nadu Acts and Ordinances

The following Act of the Tamil Nadu Legislative Assembly received the assent of the President on the 29th January 2009 and is hereby published for general information:-

ACT No.2 Of 2009

An Act further to amend the Registration Act, 1908 , in its application to the State of Tamil Nadu.

BE it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Fifty-ninth year of the Republic of India as follows:-

1. (1) This Act may be called the Registration (Tamil Nadu Amendment) Act, 2008

(2) it extends to the whole of the State of Tamil Nadu

(3) It shall come into force on such date as the State Goverment may, by notification, appoint.

2. For section 22-A of the Registration Act, 1908, the following section shall be substitued, namely:-

22-A Refusal to register certain documents- Notwith standing enything contained in this Act, the registering officer shall refuse to register any of the following documents, namely:-

(1) instrument relaing to the transfer of immovable properties by way of sale, gift, mortgage, exchange or lease,-

(I) belonging to the state Goverment or the local authority or Chennai Metropolitan Development Authority established under section 9-A of the Tamil Nadu Town and Country Planning Act,1971:

(II) beloning to, or given or endowed for rhe purpose of, any religious institution to which the Tamil Nadu Hindu Religious and Charitable Endwments Act, 1959 is applicable

(III) donated for Bhoodan Yagna and vested in the Tamil Nadu State Bhoodan Yagna Board establisted under section 3 of the Tamil Nadu Bhoodan Yagna Act 1958; or

(IV) of Wakfs which are under the superintendence of the Tamil Nadu Wakf Board established under the wakf Act,1995,

unless a sanction in this regard issued by the competent authority as provided under the relevant Act or in the absence of any such authority, an authority so authorised by the state Goverment for this purpose, is produced before the registering officer;

(2) instrument relating to the transfer of ownership of lands converted as house sites without the permission for development of such land from planning authority concerned:

Provided that the house sites without such permission may be, registered if it is shown that the same house site has been previousiy registered as house site.

Explanation 1.- For the purpose of this section 'Local authority' means,-

(I) any Municipal Corporation constituted under any law for the time being in force; or

(II) a Municipal Council constituted under the Tamil Nadu District Municipalities Act,1920; or

(III) a Panchayat Union Council or a Village Panchayat constituted under the Tamil Nadu Panchayats Act, 1994; or

(IV) any other Municipal Corporation, that may be constituted under any law for the time being in force.

Explanation II.- For the purpose of this section 'planning authority' means the authority constituted under section 11 of, and includes the Chennai Metropolitan Development Authority established under section 9-A of the Tamil Nadu Town and Country planning Act, 1971;

(3) instrument relating to cancellation of sale deeds without the consent of the person claming under the said sale deed.

(By order of the Governor)

S.DHEENADHAYALAN
Secretary to Goverment,
Law Department.

True copy



கடன் தொல்லை தீர்க்கும் திருச்சேறை செந்நெறியப்பர்!

தமிழகத்து ஆலயங்கள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு தனிச் சிறப்புகள் உண்டு. அந்த வகையில், கடன் தொல்லை தீர்க்கும் தலமாகத் திகழ்வது தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள திருச்சேறை சிவாலயமாகும்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களுள் ஒன்றாக திருச்சேறை விளங்குகிறது.

மனிதனுக்கு செம்மை தரும் நெறியை முத்தி நெறியை அளிக்கும் தலமாக விளங்குவதால், இறைவனுக்கு செந்நெறியப்பர் என்ற பெயர் வழங்குகிறது.

பஞ்சசாரசேத்திரம் எனும் வைணவ கோயிலின் அருகே அமைந்துள்ளதால், மூலவர் சாரபரமேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.

ஆலய அமைப்பு

கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள கோயிலின் முன்பாகத் திருக்குளம் காணப்படுகிறது. இங்கே அமுதத்தின் ஒரு சொட்டு விழுந்து, இத்திருக்குளம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் பிந்துசுதா என்று அழைக்கப்படுகிறது.

சிறிய ராஜகோபுரத்தினைக் கடந்து உள்ளே சென்றால் கருவறையில் மூலவர் செந்நெறியப்பர் எனப்படும் சாரபரமேஸ்வரர் நமக்கு காட்சி தருகின்றார். இவரை வலமாக வரும்போது மேற்கே தல விநாயகரும் அவரருகே மார்கண்டேயர் நிறுவி தௌமிய முனிவராலும், மிருகண்ட முனிவராலும்

வழிபாடு செய்யப்பட்ட கடன் தொல்லை நீக்கும் ருண விமோசனர் எழுந்தருளியுள்ள சன்னதி உள்ளது. அதையடுத்து, பாலசுப்ரமணியர் சன்னதியைக் காண்கிறோம்.

இத்திருக்கோயிலில் உள்ள இறைவனுக்கு நாம் அனைவரும் அவனது உடைமைகளாவோம் என்பதால், இறைவன் உடையான் எனவும், இறைவி உடையாள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இதனால் இத்தலத்தற்கு **உடையார் கோயில்** என்ற பெயரும் வழங்குகிறது.

மூன்று துர்க்கைகள்

இவ்வாலயத்தின் மற்றொரு சிறப்பு சிவ துர்க்கை, வைஷ்ணவி துர்க்கை, பிரம்ம துர்க்கை என மூன்று வகை துர்க்கைகள் ஒரே சன்னதியில் காட்சியளிக்கின்றன. இம்மூன்று துர்க்கைகளுக்கும் வெள்ளிக் கிழமைகளில் ராகு கால பூஜை மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

அபூர்வ பைரவர்

எந்த சிவாலயத்திலும் இல்லா தனிச் சிறப்பாக இங்குள்ள பைரவர் தனது இடது மேல்கரத்தில், சூலக் குறியிட்ட மணியுடன் காட்சி தருகின்றார். இதனை திருநாவுக்கரசர் தனது தேவாரத்தில்,

"விரித்தபல் கதிர்கொள்சூலம் வெடிபடு தமருங்கை
தரித்ததோர் கோலே கால பயிரவனாகி வேழம்.. .. .. .." எனப் புகழ்கின்றார்.

சிவபெருமானே பைரவர் கோலத்தில் காட்சியளிப்பதாக இப்பாடல் குறிப்பிடுகிறது. இவரை அஷ்டமி தோறும் வணங்கினால், வழக்குகளில் வெற்றி, நவக்கிரக தோஷங்கள் நீங்குதல், காரிய சித்தி ஆகியவை கைகூடுமென நம்பப்படுகிறது.

ஞானம்பிகை

வெளிப் பிரகாரத்தில் சார பரமேஸ் வரருக்கு இடது பக்கம் தனிச் சன்னதியாக ஞானாம்பிகை சன்னதி அமைந்துள்ளது. இறைவன் நெறிப்படுத்திய வாழ்க்கையின் ஞானத்தை அன்பர்களுக்கு அருள்பவள் இவளே என்பது ஐதீகம். அன்னைக்கு ஞானவல்லி என்ற பெயரும் வழங்குகிறது.

சூரிய பூஜை

சூரியன் வழிபடும் தலங்களுள் ஒன்றாக இத்தலமும் விளங்குகின்றது. ஆண்டுதோறும் மாசி மாதம் 13,14,15 ஆகிய மூன்று நாட்களில் சூரியனின் காலைக் கதிர்கள் இறைவன் மீது விழுகின்றன. சிறிது நேரம் கழித்து அம்பிகையின் பாதங்களிலும் சூரியக் கதிர்கள் நேரடியாக விழுகின்றன. (இதே மூன்று நாட்களில் மாலை நேரங்களில் கண்டியூரில் சூரிய பூஜை நிகழ்வது குறிப்பிடத்தக்கது.)

ருண விமோசனர்

மார்கண்டேய முனிவர் தனது ஆத்மார்த்த மூர்த்தியான லிங்கத்தை இத்திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் விநாயகருக்கு அருகில் அமைத்து வணங்கி வந்தார். அந்த லிங்கமே கடன் நிவர்த்தீஸ்வரராக விளங்கும் ருண விமோசன லிங்கேசுவரர் ஆவார். (ருணம் என்றால் கடன், விமோசனம் என்றார் நிவர்த்தி, ஆக, கடன் நிவர்த்தி செய்யும் ஈசன் என்பது இதன் பொருள்.)

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்நாளில் சுகமாக வாழவே ஆசைப்படுகின்றனர். ஆரோக்கியத்துடனும்,

அறிவுடனும் இருந்தாலும், வறுமை இருக்குமானால் அவனுக்கு சுகமில்லை. வறுமையை நீக்கிச் சுக வாழ்வளிக்கும் இறைவனாக இவர் விளங்குகின்றார். இவரை பதினோரு திங்கட்கிழமைகள் தொடர்ந்து அர்ச்சனை செய்து அபிஷேகத்தில் கலந்து கொண்டால், பொருள் வழக்கு, கடன் தொல்லை, முற்பிறவிக் கடன் தொல்லை முதலியன நீங்கும். அத்துடன் வறுமை விலகி, செல்வம் பெருகும் என்பது ஐதீகம். இதனை உறுதிப்படுத்தும் விதமாக பக்தர்களின் கூட்டம் நாள்தோறும் கூடிக்கொண்டே வருகிறது.

விழாக்கள்

ஆடிப்பூரம், நவராத்திரி, கந்தர்சஷ்டி, பிரதோஷம், திங்கட்கிழமைதோறும் ருண விமோசனருக்கு சிறப்பு பூஜை, அஷ்டமி தோறும் பைரவருக்கு சிறப்பு பூஜை என விழாக்களுக்குப் பஞ்சமில்லை.

தலவிருட்சம்

இவ்வாலயத்தின் தலவிருட்சம் பஞ்ச வில்வங்களில் ஒன்றான மாவிலங்கையாகும். இதன் சிறப்பு வருடத்தின் 4 மாதங்கள் வெறும் இலைகளாகவும்; அடுத்த 4 மாதங்கள் வெண்மைநிறப் பூக்களாகவும்; அதற்கடுத்த 4 மாதங்கள் பூ, இலை எதுவுமின்றியும் காணப்படும்.

தீர்த்தம்

கோயிலின் முன்புறம் பிந்துசுதா என்னும் அமுதத்துளி தீர்த்தமும், மார்கண்டேய தீர்த்தமும், ஞான தீர்த்தமும் அமைந்துள்ளன . மார்கண்டேய தீர்த்தம் தெப்பக்குளமாகவும், ஞான தீர்த்தம் கிணறாகவும் உள்ளன.

கல்வெட்டுகள்

இத்தலத்திலுள்ள சாரநாதப் பெருமாள் திருக்கோயிலின் மூன்று கல்வெட்டுகள் தொல்லியல் ஆய்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளன. அவை பரகேசவரிவர்மன் (கி.பி. 912 – கி.பி. 917) மற்றும் முதலாம் ராஜேந்திரன் (கி.பி.1012) காலத்திய கல்வெட்டுகளாகும். இவற்றில் வைணவ ஆலயத்திற்கு வழங்கப்பட்ட கொடைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கல் வெட்டுகளில் இத்தலம் சேற்றூர் என குறிப்பிடப்பட்டுள்ளது. சேற்றூரே சேறையாக மருவி தற்போது திருச்சேறை என வழங்குகிறது.

அமைவிடம்

இவ்வாலயம் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில், கும்பகோணம் திருவாரூர் வழித்தடத்தில் கும்பகோணத் திலிருந்து தென்கிழக்கே 15 கிலோ மீட்டர் தொலைவில், காவிரியின் துணை நதியான முடிகொண்டான் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. திருச்சேறை திவ்ய தேசங்கள் 108 ல் ஒன்றாகும் இங்கே சாரநாயகி தாயார் உடனுறை சாரநாதப் பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருப்பதி திருமங்கையாழ் வாரால் மங்களாசாசனம் செய்யப் பட்ட தலமாகும்.

இத்தலத்தின் அருகில் நரையூர், சித்தீச்சரம், நாலூர், மெய்ஞானம், குடவாயில் போன்ற தலங்களும் அமைந்துள்ளன.

மனிதப் பிறவியே கடன் பாக்கியால் ஏற்பட்டதுதான். இந்தப் பிறவிக் கடன்களையும், பொருளாதாரக் கடன்களையும் நீக்கி, வளமுடன் வாழ திருச்சேறை இறைவனை வழிபடுவோம்.

படங்களும், கட்டுரையும்
-பனையபுரம் அதியமான்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் குடமுழுக்குவிழா 8-4-2009 அன்று மிக சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்களும், ஆதீனப் பெருமக்களும், அலுவலர் பெருமக்களும், ஆன்றோர்களும் சான்றோர்களும் பக்தகோடிகளும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



குடமுழுக்கு விழா காட்சிகள்

சென்னை மாநகரில், புராதானச் சிறப்புமிக்க கோயில் அருள்மிகு சொர்ணாம்பிகை உடனாய அருள்மிகு பாரத்வாஜேஸ்வரர் ஆலயம்.

இக்கோயில் கோடம்பாக்கம் என்.எஸ்.கே.சாலை என பெயர் பெறும் ஆற்காட்டு சாலையில். வடபழனி ஆண்டவர் கோயிலுக்கு வடகிழக்கே நான்கு பர்லாங்கு தூரத்தில் உள்ளது. கோடம்பாக்கம் பவர் அவுஸ் பேருந்து நிற்கும் இடத்திலிருந்து, சிவன் கோயில் தெரு வழியாக

அருள்மிகு பாரத்வாஜேசுவரர் ஆலயம்

சென்றால் இத்திருக்கோயிலை அடையலாம்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் ஸ்ரீ பாரத்வாஜேசுவரர். அம்பிகையின் பெயர் சொர்ணாம்பிகை. வேண்டிடும் அடியார்களுக்கு வேண்டிய அனைத்தும் ஈந்தருளும் எம்பெருமான் பாரத்வாஜேசுவரரின் பெருமையை சொல்ல வார்த்தைகள் போதாது. இத்திருக்கோயிலின் வரலாறு மிகப் பழமை வாய்ந்ததாகும்.

சென்னை நகரும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் தொண்டை நாடு என்ற நாட்டுப் பிரிவில் அடங்கியதாகும். காஞ்சி மாநகரை தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட பல்லவ மன்னர்கள் இந்நாட்டை 24 கோட்டங்களாகப் பிரித்து ஆண்டனர் என்பதை சரித்திர வாயிலாக அறிகிறோம். அவற்றுள் இரண்டாவது கோட்டமாக அமைந்திருந்தது புலியூர் கோட்டம்! அப்புலியூர் கோட்டத்தின் தலைநகர் புலியூர். அப்புலியூர் காலமாற்றத்தால் கோடம்பாக்கத்துள் சிறுபகுதியாக இப்போது இருக்கிறது.

குன்றத்தூரில் வாழ்ந்த சேக்கிழார் சுவாமிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர் பிறந்த குன்றத்தூரும் இப்புலியூர் கோட்டத்தைச் சேர்ந்திருந்தது என்ற குறிப்பு காணக்கிடக்கிறது. ஒரு பழம் பாடல் ஒன்றில்.

"நாலாறு கோட்டத்துள் புலியூர் கோட்டம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் புலியூரில் கோயில் கொண்டிருக்கும் பாரத்வாஜேஸ்வரர் பெருமையைப் பற்றி ஒரு புலவர் கூறுகிறார்:-

கன்னிஇளம் தமிழணங்கு களிப்பெய்தும்
தொண்டை நாட்டில் தெய்வம்
மன்னி உள் திருப்பதிகள் பலவற்றுள்
மாண்பு மிகு கோடம்பாக்கம்
பன்னிருகை பரமனவன் பழகும்
வடபழனி சார்ந்த
தொன்னகராம் புலியூர் சிறப்பினை
யாம் சொல்லப்போமோ!

என்று பாடி, அத்தகைய சிறப்பு வாய்ந்த புலியூரில் பாரத்வாஜேஸ்வரர் எழுந்தருளி இருக்கின்றார் எனவும் கூறியுள்ளார்.

கற்பகமாய் அடியார்களுக்கு அருள்

செய்வானே!–

என திருத்தாண்டகத்தில் கூறியுள்ளதைப் போல பாரத்வாஜேஸ்வரர் பக்தர்களின் குறைகளை நீக்கி இன்பமளித்து அருள்பாலித்து வருகிறார்.

பாரத்வாஜப் பெருமான் கிழக்கே நோக்கியிருக்க அம்மை சொர்ணாம்பிகை தெற்கே நோக்கியவாறு கோயில் கொண்டுள்ளாள். கிழக்கே வாயில் இருப்பினும், தெற்கு வாசலே முதன்மையான வாயிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இக்கோயிலுக்குச் செல்லுமுன், கோயிலின் வலது பக்கத்தில் அரச மரமும், வேப்ப மரமும் சூழ காட்சியளிக்கும் மகா கணபதியை வணங்கிச் செல்லலாம்!

அம்மரங்களைச் சுற்றிப் பெரிய மேடை அமைக்கப்பட்டுள்ளது. காலையும், மாலையும் ஆடவரும், பெண்டிருமாகப் பக்தர்கள் இம்மரங்களைச் சுற்றி வந்து கணபதியை வணங்குகின்றனர்.

பக்தர்கள் சிலர் தங்கள் குறைகள் நீங்க வேண்டும், வேண்டியது கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறு துணிகளை இம்மரங்களில் கட்டியிருப்பதைக் காணலாம்.

மகா கணபதியை வணங்கிய பின்னர் கோயிலின் உள்ளே சென்றால், சொர்ணாம்பிகை அம்மனை தரிசனம் செய்யலாம். மகா மண்டபத்தில் ஒரே இடத்தில் நின்று கொண்டே, பாரத்வாஜப் பெருமானையும், சொர்ணாம்பிகை அம்மனையும் தரிசிக்கலாம்.

இத்திருக்கோயிலின் கருவறைக் கோட்டமாடங்களில் நிற்கும் நிலையில் உள்ள விநாயகர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, திருமால், பிரம்மா, ஆகியோரைக் காணலாம் கோமுகத்துக் கருகில் சண்டிகேசுவரரைத் தரிசிக்கலாம்.

பிரகாரத்தில் தனித்தனி சந்நிதிகளில் கன்னி. மூலையில் பிள்ளையார், மேற்கில் வள்ளி தெய்வானையோடு முருகப் பெருமான், வடமேற்கில் ராமநாதர், வடகிழக்கில் பைரவர், நவக்கிரகங்கள் ஆகியோருக்கு தனித் தனியே சன்னதிகள் உள்ளன.

பாரத்வாஜேஸ்வரத்து அளவுகோல்

பண்டைக்காலத்தில் நிலங்களை அளக்க பெரிய அளவுகோள்கள், டேப் முதலியன இல்லை. சரியான அளவுகோல் கடைகளிலும் கிடைக்காது. தேவை ஏற்படும் போது மக்களும் அதிகாரிகளும் நீண்ட மூங்கிலை வெட்டிக் கொண்டுவந்து முதன்மைக்கோல் எனப்படும் கோலுடன் வைத்து அதில் அடையாளங்களை இட்டு அளவுகோல் தயாரித்துக் கொள்வர்.

மூலக்கோல் எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்க வேண்டும் என்பதால் கோயில்களில் அதை செதுக்கி வைப்பர். அத்தகைய முதன்மை அளவுகோல் ஒன்றைப் பாரத்வாஜேஸ்வரர் ஆலயத்தின் வடபுறப் பட்டைப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இக்கோயில் அந்நாளில் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்ததால் இங்கே பலரும் கண்டு பயன் கொள்ளுமாறு இந்த அளவுகோலைக் செதுக்கியுள்ளனர்.

கிழக்கில் கருவறையை நோக்கியவாறு கொடிமரம், பலிபீடம், நந்திதேவர் எழுந்தருளிய மண்டபம் ஆகியன உள்ளன. சற்று தெற்கில் ஆஞ்சநேயர் சந்நிதி தலமரமான நாகலிங்க மரம் ஆகியவற்றைக் காணலாம்.

அடுத்து நால்வர் மண்டபத்தைக் காண்கிறோம். இம்மண்டபத்தின் உள்ளே சூரியன், விசுவநாதர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், மெய்கண்டார், அருள்நந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோரது திருஉருவங்களைக் காண்கிறோம்.

பாரத்வாஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கருவறையின் முன் வாசலின் இருபுறமும் ஆதிவிநாயகரும், ஹரித்ரா கணபதியும் காட்சியளிக்கின்றனர்.

இக்கோயிலில் விநாயகர், சோமாஸ்கந்தர், தனி அம்மன், சண்டிகேசுவரர், நடராஜர், சிவகாம சுந்தரி, மாணிக்கவாசகர் ஆகிய திருவுருவங்கள் உலாத் திருமேனிகளாக அமைந்துள்ளன.

பாரத்வாஜேஸ்வரர் கோயில் என அழைக்கப்படும் இக்கோயிலுக்கு முன்பு 'திருவாலீஸ்வரர் திருக்கோயில்' எனப் பெயர் இருந்ததாக சொல்லப்படுகிறது.

இராமாயணத்தில் வரும் வாலி பூசித்த பெருமான் ஆலயம், திருமயிலாப்பூர் கடற்கரையில் திருக்கோயிலாக அமைந்துள்ளதை அனைவரும் அறிவர். அந்த வாலி இங்கு வந்து சிவனைப் பூசித்ததாக ஓர் ஐதீகம். வாலி பூஜித்ததால் இக்கோயிலுக்கு திருவாலீஸ்வரர் என பெயர் வழங்கப் பட்டிருந்ததாகச் சிலர் கூறுவர்.

பாரத்வாஜ முனிவர் இக்கோயிலுக்கு வந்து,

தங்கிப் பூஜித்து வந்ததாக கூறப்படுகிறது. பாரத்வாஜ முனிவர் இக்கோயிலில் உள்ள ஈஸ்வரனை வழிபட்டு வந்தமையால் இக்கோயிலுக்கு பாரத் வாஜேசுவரர் கோயில் எனப் பெயர் ஏற்பட்டதாக கூறுவர்.

இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. பல்லவர்களின் கோத்திரம் 'பாரத்வாஜ கோத்திரம்' ஆகும். இக்குறிப்பு காஞ்சியில் உள்ள அருளாளப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் அறியப்படுகிறது.

இத்திருக்கோயிலைப் பல்லவர்கள் கட்டியதால், அவர்கள் சார்ந்த பாரத்வாஜ கோத்திரத்தின் பெயர் இக்கோயிலுக்கு இடப்பட்டதாகவும் கூறுவர்.

இக்கோயிலின் கருவறை விமானம், மாடக்கோயில் போல் அடித்தளத்தின் மீது சதுர வடிவில்கட்டப்பட்டது. ஆதியில் தேர் போன்ற அமைப்பைக் கொண்டிந்ததாகக் கூறுகின்றனர். எனவே இது கரக்கோயில் வடிவுடையதாகும்.

இக்கோயில் கருவறைப் பின்னே 'திருமால்' காட்சியளிக்கும் கோயிட்சுவரின் கீழே கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த – பழமையான கோயிலில் சிறப்பு அம்சங்கள் பல உள்ளன.

பாரத்வாஜப் பெருமான் சதுர வடிவு கொண்ட சிவலிங்கமாகக் காட்சியளிக்கிறார். இதன் விமானம் தனிச்சிறப்புடையது. கலை நுணுக்கங்கள் கொண்ட அழகிய சுதை வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கிறது.

நாகலிங்க மரம் இக்கோயிலின் தலவிருஷமாகும். இம்மரம் மிகவும் தொன்மை வாய்ந்தது. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கும் முன்னதாகத் தோன்றிய மரம் எனக் கூறுகின்றனர்.

பெருமானுக்கு நாகலிங்கப் பூக்களை நாள்தோறும் சூட்டுகின்றனர். நாகலிங்கப் பூக்களைப் பெறுவதற்கே பல பக்தர்கள் இங்கு வருகின்றனர்.

இக்கோயிலில் துர்க்கைக்கு இராகு கால பூஜை சிறப்புடன் நடைபெறுகிறது. ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் மாலை 3 மணி முதல் மாலை 4.30 மணி வரை துர்க்கைக்கு விசேஷ அர்ச்சனை செய்யப்படுகிறது. திருமணம் ஆகாத கன்னியர்கள் தொடர்ந்து ஏழு வாரங்கள் துர்க்கைக்கு அர்ச்சனை செய்து வந்தால் திருமணம் விரைவில் நடைபெறும் எனக் கூறுகின்றனர். 18 படிகளின் மீது துர்க்கை கிரிஜாகெளரி துர்க்கையாக எழுந்தருளியுள்ளாள்.

சித்திரை மாதத்தில் வருடாந்திர பெரும் திருவிழாவும், வைகாசியில் – வைகாசி விசாக விழாவும் – ஆனியில் உத்திர விழாவும் –ஆடியில் பூர விழாவும், ஆவணியில் விநாயக சதுர்த்தி விழாவும், புரட்டாசியில் நவராத்திரி விழாவும்,

ஐப்பசியில் அன்னாபிஷேக விழாவும், கார்த்திகையில் தீப விழாவும், மார்கழியில் திருவெம்பாவை விழாவும், தையில் பூச விழாவும், மாசியில் சிவராத்திரி விழாவும், பங்குனியில் உத்திர விழாவும், இதுதவிர மாத விழாக்கள் கிருத்திகை, பட்ச விழாக்கள் (15 நாளுக்கு ஒரு முறை) பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, மாதப் பிறப்பு, இன்னும் இதுபோன்ற பல விழாக்களை எல்லோரின் நல்லாதரவுடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 1973–ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் இக்கோயிலின் திருப்பணியும், குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

அதையடுத்து குடமுழுக்கு 9.9.1992 ஆம் நாளில் நடைபெற்றது. தற்போது மீண்டும் திருக்குடமுழுக்கு நடத்திட அன்பர்கள் விரும்புவதால், திருப்பணிகளை விரிவாக மேற்கொண்டு, திருக்குடமுழுக்கு நடத்திட திட்டமிடப்பட்டு.

புதியதாக இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும் பாலாலயப் பிரதிஷ்டை விழாவும் கடந்த 20.4.2009 தொடங்கி 23.4.2009 நாட்களில் நடைபெற்றன.

வேண்டுவோர் வேண்டுவதை அளித்து வரும் பாரத்வாஜப் பெருமானையும், சொர்ணாம்பிகை அம்மனையும் வழிபட்டு, எல்லா நலன்களையும் பெறுவோமாக.

உலகம் உய்ய உதித்த உடையவர்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உடனே ராமானுஜர் அந்த அத்வைத வேதாந்தியை பார்த்து குற்றமற்றவரே முதலில் தர்க்கத்தை சொல்வீராக; யார் தோற்றது, யார் வெற்றி பெற்றது என்று பின்னர் பார்த்துக் கொள்வோம் என்று சொன்னார். உடனே அந்த அத்வைத வேதாந்தி சூரியனை போல பிரகாசிப்பவரே இனி உம்மை நானோ வெல்வேன். தேவரீரது திருவடிகளைத் தந்து என்னை பாதுகாத்து அருள வேண்டும் என்றார். அது கேட்ட ராமானுஜர் உயர்ந்த வேத நெறிப்படி விவாதம் செய்து அதிலே முறைப்படி வெற்றி பெற்றால் நீர் சொல்லியபடி நான் செய்வேன் என்றார். தர்க்கம் தொடரட்டும் என்றதும் அந்த சன்யாசியும் முந்தையநாள் இரவில் ராமானுஜரிடம் திருமால் சொன்னதையே சொன்னார்.

"மற்றதற்கு மாற்றம் அந்த மாயவனார் கட்டுரைத்த
உற்றதிரு மொழிப் பொருளை உடையவரும் எடுத்துறைந்தார்
கற்றுணர்ந்தோன் முட்டுண்டேன் கள்வனேன் என எழுந்து
நற்றவஞ்சேர் எதிராச நமோநமஎன் றிறைஞ்சினான்".

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் –452.

அதற்கு பதிலுரையாக திருமால் அருளிச் செய்த உயர்ந்த பொருளையே உடையவர் எடுத்து சொன்னார். அதைக் கேட்டதும் அந்த பெரும் புலவனாகிய அத்வைத வேதாந்தி எழுந்து நின்று நல்ல தவத்தையுடைய எதிராசரே உமக்கு அடியேன் தோற்றேன் வணக்கம், வணக்கம் என்று வணங்கினார்.

தம் திருவடிகளை வணங்கிய அந்த அத்வைதியை இரண்டு கைகளால் எடுத்து அணைத்து அவர் ஏந்திய ஒற்றைத்தண்டத்தை ஒடித்தெறிந்துவிட்டு அவருக்கு மறுபடியும் உபநயனம் செய்து வைத்து யஜ்ஞோபவீதமும், சிகையும் அணிவித்தார். மேலும் யக்ஞமூர்த் திக்கு நாம, புண்ட்ரம், நாமம், மந்த்ரம், யாகம் என்னும் ஐந்து ஸம்ஸ்காரங்களைச் செய்து வைத்தார். ''உபவீதம், திரிதண்டம், கமண்டலம், ஜல பவித்திரம், கௌபீநம், அரைஞான் ஆகியவை ஆயுள் வரை கைவிடத் தகாதவை" என்று உபதேசித்தார்.

நான் தோற்றேன் ஆகில் உம்முடைய செருப்புகளை சுமப்பதோடு உம்முடைய பெயரையும் இட்டுக்கொண்டு உம்முடைய சித்தாந்தத்தில் புகக்கடவேன் என்று வாக்குறுதி அளித்தபடி அந்த அத்வைத

பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர்,
திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.

சன்னியாசியை வைஷ்ணவராக்கி அவருக்கு "அருளாளப்பெருமாள் எம்பெருமான்" என்று பெயர் சூட்டினார்.

மேலும் அவருக்காக தனியாக ஒரு மடம் கொடுத்து அவருக்கு தேவராஜமுனி என்று பெயரிட்டு அரங்கனிடம் அழைத்து, சென்று அவரைக்குளிர கடாக்ஷித்தார். எதிராசர் பெருமாளுக்கு திருவாராதனம் சமர்ப்பித்து, தானும் அமுதுசெய்து அருளி மிச்சத்தையும் ஸ்ரீபாத தீர்த்தத்தையும் அச்சீடருக்கு அருளினார். அந்த தேவராசு முனிவரும் அவற்றை பக்தியுடன் பெற்றுக்கொண்டார்.

மேலும் தொண்டனூர் நம்பி, மருதூர், அநந்தாழ்வான், யக்ஞேசர் என்ற எச்சான் ஆகிய உத்தம வைஷ்ணவர்களுக்கு தேவராஜமுனிகள் பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்துவைத்தார்.

மேலும் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரை மேற்படி உத்தம வைஷ்ணவர்களுக்கு உபதேசம் செய்ய ராமானுஜர் பணித்தபொழுது அந்த மகான் ''உடையவர் குருவியின் கழுத்திலே பனங்காயை கட்டினாற் போலே செய்தருளினார். நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று இருங்கள்'' என்று அருளிச் செய்தார் என்பதே ஆசார்ய வைபவம் தரும் செய்தியாகும்.

இந்த அருளாளப் பெருமாள் எம்பெருமானாருக்கு திருநட்சத்திரம் கார்த்திகை மாதம் பரணியாகும். இவர் ஞான சாரம், ப்ரமேய சாரம் போன்ற க்ரந்தங்கள் (நூல்) மூலம் அருளிச் செய்தார். ஒருசமயம் சில வழிப்போக்கர்கள் எம்பெருமானார் திருமடம் எங்குள்ளது என்று கேட்க அவ்வூரில் உள்ளோர்கள்,

"எந்த எம்பெருமானார் என்றார்களாம்" இதைக் கேள்விப்பட்ட அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ராமானுஜருக்கு எதிராக நாமும் ஒரு எம்பெருமானார் ஆவதா என்று கலங்கி தம் மடத்தை இடித்துத் தள்ளி விட்டார். எம்பெருமானார் மடத்திலேயே வாழத் தொடங்கினார்.

அன்று முதல் எம்பெருமானாரின் பிரசாத மிச்சத்தை பெறும் பாக்கியத்தைப் பெற்றார். ''அன்னக் கேடும் தீர்ந்தது,'' என்று மகிழ்ந்தார்.

எம்பெருமானார், தேவராஜ முனிவருக்கு நித்யம் என்று பெயர் பெற்ற எம்பெருமானுக்கு திருவாராதனம் செய்யும் முறையை விளக்கும் நூலை அருளிச் செய்து உபதேசித்தார்.

அன்றிலிருந்து திருமடத்தில் வரதராஜப் பெருமானுக்கு தினந்தோறும் ஆராதனம் செய்யும் செயலை சரீரம் விழும் வரை செய்யும்படி பணித்தார். அம்மகானும் அதனை ஏற்றுத் திருவாராதனை முறையினை குறைவராது செய்து வந்தார்.

தாம் எழுதிய ஞானசாரம் ப்ரமேய ஸாரம் என்ற நூலில் சிஷ்யனுக்கு ஆர்ச்சார்யனே தெய்வம், ஆர்சார்யாருக்கு தொண்டு செய்வதே மேலான தொண்டு, ஆர்ச்சார்யனே எம்பெருமானின் நேர் அவதாரம் என்று அந்நூலில் சொன்னார். ஸ்ரீவைஷ்ணவர் நடுவிலே கற்பகம் மரம் போல் உயர்ந்து சிறந்து விளங்கினார் அருளாளப் பெருமாள் எம்பெருமானார்.

பெருமாள், ராமானுஜரின் கனவிலே சொன்னபடி உனக்காகவே ஒப்பற்ற சிஷ்யன் ஒருவனை கொண்டு வந்துள்ளேன். நம் ஸம்ப்ரதாயம் தான் அழியாது என்று வாக்குறுதி அளித்தபடி அத்வைத வேதாந்தியை வைஷ்ணவராக்கி வைஷ்ணவர் நடுவிலே கற்பகம் போல விளங்கச் செய்தார்.

முற்றும் துறந்து சன்னியாசம் பெற்ற உடையவர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வரும் நாட்களில் உஞ்சவிருத்தி (வீதியிலே சென்று பிச்சை எடுத்தல்) எடுப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். அவ்வாறு செல்லும்போது ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவை பாசுரங்களை உணர்ந்து பாடிச் செல்வார்.

ஒரு நாள் அவ்வாறு உஞ்சவிருத்திக்குச் செல்லும்போது தெருவிலே சிறுவர்கள் பூமியிலே மணலாலே பெருமாள் திரு உருவம் வரும்படியாகக் கோடுகளை வரைந்து உடையவரைப் பார்த்து, "இதோ உம்முடைய பெருமாள்" என்று சுட்டிக் காட்டினார்கள் உடனே ராமானுஜர் பிச்சை கேட்கும் பாத்திரத்தை கீழே வைத்து விட்டு பூமியிலே விழுந்து வணங்கினார்.

மற்றொரு சமயம் வீதியிலே சிறுவர்கள்

மணலினாலே கோயில் அமைத்து பெருமாளுக்கும், நாச்சியாருக்கும் திருக்கல்யாணம் நடத்துவது போல் பாவனை செய்து மண்ணிலே பிரசாதம் வைத்து ராமானுஜர் வரும்பொழுது அந்த மணலை எடுத்து "இதோ பெருமாள் பிரசாதம் எடுத்துக் கொள்ளும்" என்று ராமானுஜரிடம் கூறவும், தன்னுடைய பிச்சைப் பாத்திரத்திலே அதை ஏற்றுக் கொண்டார்.

அடியவர்களால் எப்படி எப்படியெல்லாம் உருவங்கள் அமைக்கிறார் களோ அந்த உருவத்திலும், நாமத்திலும் பெருமாளே தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வார் என்ற நாலாயிர திவ்ய பிரபந்தத்திலே பொய்கை ஆழ்வார் அருளிச் செய்த முதல் திருவந்தாதி பாடலில் சொல்லப்பட்ட கருத்துப்படியே உடையவரின் திருஉள்ளம் எப்படியெல்லாம் எம்பெருமானிடத்தில் பக்தி கொண்டிருந்தது என்பதை இந்நிகழ்ச்சிகள் மூலம் அறிய முடிகின்றது.

"தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர் – தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியானாம்".
முதல் திருவந்தாதி–44

உடையவரின் நேர்மையான, திறமையான, ஒழுக்கமும், சத்தியமும் நிறைந்த கோயில் நிர்வாகத்தினால் கோயில் பொருள்களை தன் சொந்தத்திற்கு பயன்படுத்திய அர்ச்சகர்கள் சிலர் உடையவரை வெறுக்கலாயினர். உடையவருக்கு விஷமிட்டு கொல்லவும் திட்டம் தீட்டினர். பொருளுக்கு ஆசைப்பட்டு ஒரு அந்தணர் அவருக்கு உதவ முன்வந்தார்.

உடையவர் உஞ்சவிருத்தி எடுக்க வரும்போது விஷம் கலந்த உணவை அவர்களுக்கு அளிக்க தன் மனைவிக்கு உத்தரவிட்டார். அந்த அம்மையாரும் உடையவர் வரும்பொழுது மனம் கலங்கி கண்ணீர் சொரிய அந்த உணவினை அவருடைய பாத்திரத்தில் இட்டார்.

இமைப்பொழுதும் உடையவரின் நெஞ்சை விட்டு நீங்காமல் குடியிருந்து வரும் ஸ்ரீரங்கநாதரின் திருவருளினால், அந்த அம்மையார் இட்ட உணவு விஷம் என்று தெரிந்து கொண்டு அன்றிலிருந்து உணவைத் துறந்து நீர் மட்டுமே அருந்தி வாழ்ந்தார். அன்றிலிருந்து உஞ்சவிருத்தி எடுப்பதையும் நிறுத்திக் கொண்டார்.

இச்செய்தியை அறிந்த திருக்கோட்டியூர் நம்பிகள் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கம் வருவதை அறிந்த உடையவர் தன் சீடருடன் அவரை எதிர்கொண்டு அழைக்கக் காவேரி மணலில் கடும் கோடை வெயில் உச்சிப்பொழுதில் சென்றார்.

தன் குருவாகிய திருக்கோட்டியூர் நம்பிகள் காவேரி மணலில் கடும் கோடை வெயிலில் நடந்து வருவதை கண்ட உடையவர் கொதிக்கும் மணல் என்றும் பாராமல் திருக்கோட்டியூர் நம்பியின் திருவடிகளிலே விழுந்தார். திருக்கோட்டியூர் நம்பிகளோ எழுந்திரு என்று சொல்லவில்லை. குருநாதர் கூறாத வரை எழுந்திருப்பது சரியில்லை என்பதால் எம்பெருமானாரும் கொதிக்கும் மணலில் அப்படியே விழுந்து கிடந்தார்.

இதைக் கண்ட உடையவரின் சீடர்களில் ஒருவரான ப்ரணதார்த்திஹரர் என்பவர் மிகவும் மனம் நொந்து திருக்கோட்டியூர் நம்பிகளைப் பார்த்து "நல்ல குருநாதர், நல்ல சீடர்; என் குருநாதரை கொல்லவா வந்தீர்" என்று மனம் நொந்து பேசிவிட்டு தன் குருநாதர் மணலில் கிடப்பதை பொறுக்காத அந்த மகான் தானும் மணலில் விழுந்து உடையவரை தன் மீது படுக்க வைத்துக் கொண்டார்.

அப்படியே கொதிக்கும் மணலில் தொடர்ந்து படுத்துக் கிடந்தார். ப்ரணதார்த்திஹரரின் கடும் சொல்லைக் கேட்டு புன்னகை புரிந்த திருக்கோட்டியூர் நம்பிகள் உடையவரையும், ப்ரணதார்த்திஹரரையும் வாரி எடுத்து உடையவரின் கைபிடித்து "எம்பெருமானரே இந்த பாகவத உத்தமரைக் கொண்டு உணவு சமைத்து பிரசாதம் சாப்பிடுவீராக" என்று அருளிச் செய்தார். அன்றிலிருந்து உடையவருக்கு உணவு சமைக்கும்

பொறுப்பினை ப்ரணதார்த்திஹரர் ஏற்றுக் கொண்டார்.

அந்த மகானே பின்னர் கிடாம்பியாச்சான் என அழைக்கப்பட்டார். கிடாம்பியாச்சானின் அத்தையின் கணவரே ராமானுஜரின் தாய் மாமன் ஆகிய பெரிய திருமலை நம்பி ஆவார். பெரிய திருமலை நம்பி கிடாம்பியாச்சானை உடையவருக்கு உதவியாக இருக்கும்படி அனுப்பி வைத்தார்.

ஒரு சமயம் இந்த கிடாம்பியாச்சான் என்ற மகான் திருமாலிருஞ்சோலை மலை என்ற அழகர் கோயிலில் அழகர் முன் நின்று தன்னை ஒரு கதியும் இல்லாதவன் என்று சொன்னபொழுது அழகரே வாய் திறந்து உடையவரை 'குருநாதராக பெற்ற நீர் உம்மை ஒரு கதியும் அற்றவன் என்று சொல்லக் கூடாது' என்று பெருமாள் திருவாய் மலர்ந் தருளினார்.

இவ்வாறு பக்குவம் பெற்ற கிடாம் பியாச்சானை தனக்கு உணவு சமைத்து தரும் பணியை செய்யச் சொல்லி உபவாசத்தை முடித்துக் கொண்டார் உடையவர்.

உடையவரை எப்படியாவது ஒழித்துக்கட்ட வேண்டும் என்று பல வகையிலும், துன்புறுத்திய கொடியவர்களின் கொடுமை தாங்காது ஸ்ரீரங்கம் விட்டு அருகில் இருக்கும் திவ்ய தேசமாகிய திருவெள்ளறைக்கு எழுந்தருளி இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார்.

உடையவரின் பிரிவைத் தாங்க மாட்டாத ஸ்ரீரங்கநாதர் திருவரங்கப் பெருமாள் அரையரை திருவெள்ளறைக்கு எழுந்தருளச் செய்து உடையவரை மீண்டும் ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து வர அருளிச் செய்தார் திருவரங்கப் பெருமாள். அரையரும் திருவெள்ளறைக்குச் சென்று உடையவர் முன்பு நின்று கொண்டு திருவாய்மொழி ஒன்பதாம்பத்து, ஐந்தாம் திருமொழியாம் ("இன்னுயிர் சேவலும் நீரும், கூவிக் கொண்டு இங்கு எத்தனை") என்ற பாசுரத்திற்கு இசையுடன் நடனமாடி உடையவரை மகிழ்வித்து திருவரங்கத்திற்கு அழைத்து வந்தார். உடையவரும் தன் விரோதிகளின் கொடுஞ்செயல்களை எல்லாம் மன்னித்து ஸ்ரீரங்கத்திலே வாழ்ந்து வந்தார்.

கிடாம்பியாச்சானைப் போல அனந்தாழ்வார், எச்சான், நல்ல மருதூர் நம்பி, தொண்டனூர் நம்பி ஆகிய பலரும் உடையவருக்கு சிறந்த சீடர்களாக விளங்கினார்கள்.

ஒரு நாள் உடையவர் தன் சீடர்களோடு திருவாய்மொழிக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தபொழுது ஒரு பாசுரத்தில் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்" என்ற திருவாய்மொழிக்கு விளக்கம் சொல்லிவிட்டு திருமலையில் பூந்தோட்டம் அமைத்து திருவேங்கட பெருமானுக்கு தினமும் பூமாலை வழங்கும் புண்ணிய செயலை செய்ய வல்லார், இங்கு எவரேனும் உண்டோ, என்று கேட்கவும் உடையவரை விட்டு பிரிய மனமில்லாமல் எல்லாரும் மௌனமாக இருக்க, அனந் தாழ்வார் எழுந்து உடையவரை வணங்கி "அடியேன் இப்பொழுதே தேவரீர் கட்டளைப்படி செய்கிறேன்," என்று வணங்கி நின்றார்.

உடையவரும் மனம் மகிழ்ந்து "நீரே ஆண் பிள்ளை," என்று புகழ்ந்தார். அன்று முதல் அனந்தாழ்வார் குலத்தவர்களை அனந்த ஆண்பிள்ளை என்று அழைக்கலாயினர்.

அனந்தாழ்வாரை பார்த்து உடையவர், "குற்ற மற்றவனே திருவேங்கிடமுடையான் மனம் மகிழத்தக்க வகையில் திருவேங்கட மலைக்கு சென்று நீ நாள் தோறும் மாலை தொடுத்து கொடுத்து வருவாயாக," என்று சொல்லவும், அனந்தாழ்வார் மனம் மகிழ்ந்து தன் மனைவியுடன் கருணாமூர்த்தியாய் விளங்கும் சீனிவாசப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் திருவேங்கட மலைக்கு வந்து சேர்ந்தார்.

"அனந்தாழ் வானை முகநோக்கி
ஆசி லாதாய் வேங்கடவன்
மனந்தான் மகிழத்திருமாலை மலைமேல்
ஏகிச் சமைத்தளித்துத்
தினந்தான் வருதி நீயென்னத்
தெண்ட னிட்டாங்(கு) எழுந்திருந்து
கனஞ்சேர் குழல்தன் மனைவியொடு
கருணைமுகில்சேர் வேங்கடத்தில்".
ஸ்ரீராமனுஜ வைபவம் பாடல் 478.

(வளரும்)

பத்துகொலாம் அடியவர் செய்கை

சிவனடியார்கள் சிவனை நினைதொரும், காண்தொரும் பேசும் தொரும் எப்போதும் மனம் மகிழ்கின்றனர். அவனது கருணைத் திறங்களைப் பேசும்போதும் அவர்கள் மனம் கசிந்து விழிநீர் பெருக, பேச்சும் இன்றி ஓவியம் போல் ஆகின்றனர்.

அடியவர்களுக்கு பக்தி மேலீட்டால் அகத்தும் புறத்தும் ஏற்படும் நிலைகளையும் அதனால் உண்டாகும் செயல்பாடுகளையும் (மெய்ப்பாடுகளையும்) பத்து பத்தாக வகுத்துள்ளனர். இவை அடியவர் செய்கை எனக் குறிக்கப்பட்டுள்ளன.

அடியவர்களின் திருமேனியில் நிகழும் மெய்ப்பாடுகளே அகத்துச் செய்கைகள் எனப்படும். இவை

1) மிடறு விம்முதல் 2) நா தழுதழுத்தல்

3) இதழ் துடித்தல் 4) உடல் குலுங்குதல்

5) மயிர் சிலிர்த்தல் 6) வியர்த்தல்

7) சொல் எழாமை 8) கண்ணீர் அரும்புதல்

9) வாய்விட்டு அழுதல் 10) மெய் மறத்தல்

(மயங்கி நிற்றல்) என்பனவாகும்.

திருவாசகத்தில் அனேக இடங்களில் இந்த மெய்ப்பாடுகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அருள் உற்ற போது கண்ணீர் சொரிய ரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பு ஆகி, என்றும் சிவனை நோக்கி அழைத்து கண்டம் தழுதழுத்து கண்ணீர் அருவி பாய, என்றும் நெக்கு நெக்கு உள் உருகி உருகி நின்றும் இருந்தும் கிடந்தும், எழுந்தும், அழுதும் தொழுதும் நானாவிதத்தால் கூத்து நவிற்றி எனவும் அடிகளார் அடியவர்கள் இயல்பைக் கூறுகின்றார்.

அடியார்கள் புறத்தே கடைப்பிடிக்கும் செய்கைகள் பத்தாகும். அவை

1, பக்தர்களைக் கண்டபோது பணிந்து வணங்குதல்

2. அடியவர்களோடு உடன் உறைந்திருத்தல்

3. சிவபெருமானின் புகழைப் பாடிப் பரவுதல்

4. சிவநாமங்களை மந்திரமாக உச்சரித்தல்

5. பக்தியுடன் சிவபூசை செய்தல்

6. சிவ புண்ணியங்களைச் செய்தல்

7. சிவபெருமான் வீரதீரங்களை பேசுதல்

8. சிவாலய வழிபாடு செய்தல்

9. சிவனடியாரிடத்து அன்றிமற்றவர்களிடம் உண்ணாமை

10. சிவனடியார்களுக்கு வேண்டுவதை அறிந்து கொடுத்தல் என்பனவாகும்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் இவற்றைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றனர்.

அப்பர்பெருமான் அடியவர்கள் செய்கைகள் பத்தாகக் கூறுவார். பத்து கொலாம் அடியவர் செய்கை என்று விடம் தீர்த்தப் பதிகத்தில் குறிக்கின்றார். மணி வாசகர் பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர் என்று குறிக்கின்றார்.

தாராசுரம் இராவதேசுவரர் ஆலயத்தில் அறுபத்து மூவர் வரலாற்றைக் குறிக்கும் புடைப்புச் சிற்பங்கள் வரிசையாகச் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளன. இவை அளவால் சிறிய் தென்றாலும் கலைச்சிற்பம் அழகு மிக்கவை.

இதில் பத்தராய்ப் பணிவார் எனும் தலைப்பின் கீழ் அமைந்த சிற்பம் அடியவர்களின் செய்கைகளைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இதில் பத்து அடியவர் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒருவர் அடியவருக்கு உணவிடும் கோலத்தில் உள்ளார். அதை ஒரு அடியவர் ஏற்கும் கோலத்தில் உள்ளார். இது சிவனடியார்களுக்கு அமுதிடுதல் முதலானவற்றைக் கொடுப்பதையும், அடியவர்களிடம் மட்டுமே உணவு ஏற்று உண்ண வேண்டும் என்பதையும் உணர்த்தும் வகையிலான இரண்டு செய்கைகளைக் குறிக்கின்றன.

மூன்றாமவர் சிவனை தியானித்துக் கொண்டு சிவயோகத்தில் நிலை பெற்றிருக்கின்றார். நான்காமவர் தலைமேல் கை குவிந்து வணங்கிக் கொண்டிருக்கிறார். இது கண்ணீர் பெருகி தலைமேல் குவித்து வணங்குதலைக் குறிக்கிறது. ஐந்தாமவரும் ஆறாமவரும் சிவபுராணங்களை விருப்பமுடன் கேட்பவரும் கூறுபவருமாக அமைந்துள்ளனர். இவர்களுக்கு இடையே சிவலிங்கம் காட்டப்பட்டுள்ளது. ஏழாமவர் சிவபூசை செய்து கொண்டிருக்கின்றார். எட்டாமவர் ஒன்பதாமவர் தலைமேல் கைகுவித்து நடந்து செல்லும் கோலத்தில் உள்ளார். இது சிவாலயங்களையும் சிவப்பதிகளையும் சென்று தரிசிக்கும் நிலையாகும். பத்தாமவர் நின்றவாறு கை கூப்பியுள்ளார். இது தன்னை மறந்து சிவத்துள் நிலைபெற்று நின்றிருத்தலைக் குறிக்கின்றது.

இப்படி அடியவர்களின் செயல்களைப் பத்தாக வகைப்படுத்தும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது.

அபிராமி பட்டர் 1) விரும்புதல், 2) தொழுதல், 3) விழிநீர் மல்குதல், 4) அரும்புதல், 5) ததும்புதல், 6) ஆனந்தமாகி, 7) அறிவிழந்து, 8) சுரும்பில் களித்து, 9) மொழி தடுமாறி, 10) பித்தர்நிலை எய்தல் எனும்பத்து நிலைகளை அபிராமி அந்தாதியில் கூறுகிறார்.

சித்தாந்த சைவர்கள் அடியவர் செய்கைகளாக பத்தினைக் கூறுவர். அவற்றைத் தசகாரியம் என அழைக்கின்றனர். தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், என்பனவாகும். இவற்றைப் பற்றிய விளக்கங்களை சித்தாந்த நூல்களான சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், உண்மை நெறி விளக்கம் முதலியவற்றில் காணலாம்.

– பூசை.ச.ஆட்சிலிங்கம்

பிறர் பொருள் எட்டி

பிறவித்துன்பம் தொலைய என்ன வழி என்று சிந்திப்பது அறிவுடைமை.

"பிறர் பொருள் எட்டி" என்ற கட்டுரை மிகவும் அரிய பெரிய கருத்துக்ளையுடையது.

ஆன்மாக்களாகிய நாம் எண்ணில் கோடி காலமாக இறப்பதும் பிறப்பதுமாகப் பிறவிப் பெருங் கடலில் வீழ்ந்து உழல்கின்றோம். இந்தப் பிறவித் துன்பத்தை அகற்றி முக்தி இன்பத்தை நாம் பெற வேண்டும்.

"எழுகடல் மணலை
அளவிடின் அதிகம்
என திடர்பிறவி
அவதாரம்"

என்கின்றார் அருணகிரிநாதர்.

பிறவித் துன்பம் எதனால் உண்டாகின்றது? என்று தெளிதல் அறிவுடமை. பிறவிப் பிணியினால் வாடி வருந்துகின்ற நாம் அந்த நோய்க்குக் காரணத்தைக் கண்டுபிடித்து அந்த மூலத்தைக் களைய வேண்டும்.

ஒருவனுக்கு வந்த நோய்க்கு மருந்து உண்ணக் கூடாது. அந்த நோய் எதனால் வந்தது என்று கருதி அந்த மூலத்தைக் களைய மருந்து உண்ணுதல்தான் அறிவுடைமையாகும்.

பிறவித் துயரம். பற்று, அவா என்ற இரு குற்றங்களால் விளைகின்றது. திருவருளாலும் குருவருளாலும் பற்று அவா இரண்டையும் அகற்றி பிறவித் துயரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். முதலில் பிறர் பொருளில் வைக்கும் அவாவை அகற்ற வேண்டும். பின்னர் தன் பொருளில் வைக்கும் பற்றை அறவே அகற்ற வேண்டும்.

**"பற்றவா வேரொடு பசையறப்
பிறவிபோய்
முற்றவால் உணர்வு மேல் முடுகினார்"
–கம்பர்.**

**"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்."
– திருக்குறள்.**

**"அற்றது பற்றெனில் உற்றது வீடு"
–நம்மாழ்வார்.**

இந்த ஆன்றோர்களின் அமுத வாக்குகளைச் சற்று சிந்தியுங்கள். உற்று உணருங்கள். ஆன்றோரின் அருள்வாக்கு அமுதம் போன்றது. நமக்கு நலம் பயப்பது ஆன்றோரின் சொல் நமது அல்லலை அகற்ற வல்லது. அவா பிறப்பை உண்டாக்கும்.

1. குபேரன் சிவபெருமானுடன் தென்னாட்டில் விளங்கும் சிவ ஸ்தல யாத்திரை புரிந்தான். காவிரி நதி கடலுடன் சேரும் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தான். அங்குள்ள **பல்லவனீச்சுரம் சாயாவனம்** என்று புகழ் பெற்ற இரு சிவாலயங்களைத் தரிசித்து வழிபட்டான். அங்கே இயற்கை அழகும் செயற்கை வனப்பும் ஒருங்கே இணைந்து விளங்கும் காட்சியைக் கண்டு இங்கே இன்னும் இரண்டு நாள் இருந்து மகிழலாம் என்று எண்ணினான். எண்டோன் ஈசன் எண்ணுகின்ற எண்ணத்தில் இருக்கின்றான். குபேரனைப் பார்த்து "ஒரு எண்ணம் ஒரு பிறப்பைப் தரும். நீ இங்கு இருந்து மகிழ எண்ணினாய் –ஆதலால் இத்தலத்திலேயே பிறந்து வாழ்ந்து வருவாயாக," என்று கட்டளையிட்டுக் கயிலை மலை சென்றார். குபேரன் காவிரிப்பூம் பட்டினத்தில் சிவநேச குப்தருக்கும் ஞானகலைக்கும் மகனாக திருவெண்காடன் என்ற பேருடன் பிறந்தான். இவர் தான் பரம ஞானியாகிய பட்டினத்தடிகள். ஒரு எண்ணம் ஒரு பிறப்பைத் தந்தது என்றால் நாம் எண்ணுகின்ற எண்ணங்கட்கு எத்தனை

பிறவி எடுக்க வேண்டுமோ?

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப கோடியும் அல்ல பல

–திருக்குறள்.

துன்பத்திற்கு மூலகாரணமாகிய அவாவை அறுக்க வேண்டும் பிறருடைய பொருள்களைக் கண்டால் எட்டிப் பழம் போல் கசக்க வேண்டும். பிறர் பொருள்களைக் கண்டால் இனிக்கின்றதல்லவா? இது பெரும்பிழை இதனால் பிறப்பு எய்தும்.

மகாபாரதத்தில் ஆரண்ய காண்டத்தில் பழம் பொருந்து சர்க்கம் என்ற ஒரு பகுதியுள்ளது.

"உற்றது உரைத்தால் அற்றது பொருந்தும்" என்ற பழமொழிப் படி நெல்லிக்கனி மீண்டும் தனது கொப்பில் பொருந்தும் பொருட்டு பாண்டவர்கள் ஐவர்கட்குத் தங்கள் உள்ளத்தில் உள்ள உண்மைக் கிடைக்கையை கூறுமாறு கண்ணபிரான் கட்டளையிட்டருளினார்.

அப்போது பீமசேனன் கூறிய நல்வசனம் மிக உயர்ந்தது. "கண்ணா! மணிவண்ணா! பிறருடைய மனைவியர்களைக் காணநேர்ந்தால் என்னைப் பெற்ற குந்தி தேவியைப்போல் பார்க்கின்றேன். பிறருடைய பொருள்களைக் கண்டால் எட்டிக் கனி போல் எனக்குக் கசக்கின்றது, பிறர்களுடைய குற்றங் குறைகளை நான் உற்றுப் பார்ப்பதே கிடையாது! பிறருடைய துயரத்தை என் துயரமாகக் கருதி உதவி செய்ய என் உள்ளம் விரும்புகின்றது. என் உயிருக்கு இறுதியே வரினும் இந்த நான்கு கொள்கைகளைக் கைநழுவ விடமாட்டேன்! இறுதிவரை உறுதியுடன் இருப்பேன்" என்று வீமசேனன் கூறினான்.

பிறர்மனை யவரைப் பெற்ற தாயெனவும்
பிறர் பொருள் எட்டியே எனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமையன்
றெனவும்
பிறர்துயர் என்துயர் எனவும்
இறுதியே வரினும் என் மனக்கிடக்கை
எம்பிரான் இவை யென மொழிந்தான்
மறலியு மடியு மாறுமல் லியற்கை
வலிமை கூர் வாயுவின் மைந்தன்

இந்த இடத்தில் பீமனுடைய உள்ளத்தின் உயர்வு தெற்றெனத் தெரின்றது அல்லவா?

பிறருடைய உடைமை உயிருள்ள பொருளோ நமக்கு எட்டிக் கனி போல் கசக்க வேண்டும். பிறர் பொருளை விரும்புதல் கூடாது இதுதான் பிறவிப் பிணியை மாற்றும் மார்க்கமாகும்.

பிறருடைய பொருளைத் தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொண்டால் கூட அதுவும் பிறவியைத் தரும்

இந்த உண்மையை அடியில் வரும் வரலாறு உணர்த்துகின்றது.

இராஜபுரம் என்ற நகரில் "சங்கிலி" என்ற பேருடைய ஒருவர் வாழ்ந்தான். அவன் செருப்பு தைக்கும் தொழிலுடன் நகரில் பறையறையும் அரசுப் பணியையும் மேற்கொண்டிருந்தான். செல்வ செழிப்புடன் இனிது வாழ்ந்தான்.

அவனுடைய வீட்டில் கட்டில் இருந்தது; தொட்டில் இல்லை. அதனால் மிகவும் வேதனை யடைந்தான். பலப்பல தான தருமங்கள் செய்தான். சஷ்டிவிரதம் பிரதோஷவிரதம் முதலிய விரதங்களையும் அனுஷ்டித்தான். அடிக்கடி தன் ஜாதகத்தைப் பார்த்து தனக்கு மகப்பேறுகிடைக்க என்ன மார்க்கம் என்று விசாரிப்பான். ஒரு பெரியவர் அவனைப் பார்த்து "மூவாசையும் அற்ற முனிவர் ஒருவருடைய ஆசியினால் உனக்கு மகப்பேறு கிடைக்கும்" என்று கூறினார்.

அந்த உத்தமமான குணசீலன் பரமஞானி எங்கே என்று ஆராய்ந்தான். அந்த நகருக்கு அருகில் உள்ள சோலையில் ஒரு பிராமண முனிவர் உலாவிக் கொண்டிருந்தார். அவர் பற்றற்ற பரமஞானி. யாரிடத்திலும் எந்த பொருளையும் விரும்பாதவர். பசிவந்த போது காயோ கனியோ உண்பார். கால் போனவழியில் போவார். அவருடைய திருமுகத்தில் ஞானவொளி வீசும். அவருடைய கண்களில் கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

சங்கிலி அவரைக் கண்டு அவருடைய ஆசியைப் பெற விரும்பினான். கொடிய வெயில். நிலம் அனல் போல சுடுகின்ற காலம். அந்த மகான் மணற்பரப்பால் கொதிக்கின்ற ஒரு ஆற்றைக் கடக்க வேண்டி நடந்து கொண்டிருந்தார். சங்கிலி இரண்டே

தோல்களால் தைத்த ஒரு அழகிய செருப்பைக் கொண்டு போய் அவருடைய திருவடிக்கு அருகில் வைத்தான். பற்றற்ற அப்பரமஞானி வெயிலின் கொடுமையைத் தாங்க மாட்டாதவராய் அந்த பாதரட்சையைக் காலில் மாட்டிக் கொண்டு ஆற்றைக் கடந்தார். கடந்தபின் உடையவன் உடமையை எடுத்துக் கொள்ளட்டும் என்று எண்ணி செருப்பைக் கழற்றி விட்டுச் சென்றார். சங்கிலி நாம் இதனை மகானுக்கு தந்துவிட்டோம். இனி அதனை எடுத்துக் கொள்வது முறையன்று என்று எண்ணி அந்த செருப்பை எடுக்காமல் தன் இல்லம் சேர்ந்தான்.

சில காலத்துக்குப் பின் அந்த ஞானியின் ஆன்மா பிரிந்தது. இயமனுடைய பணியாளர்கள் அவரை பயபக்தியுடன் கொண்டு போய் அறக்கடவுளுக்கு முன் நிறுத்தினார்கள். அறக்கடவுள் அவரை வணங்கினார். "தவசீலரே! தாங்கள் பற்றற்ற பரம ஞானி. ஒரு நாள் சங்கிலி என்பவன் தந்த செருப்பை ஏற்றுக் கொண்டீர். அதனால். தங்களுக்கு மீண்டும் ஒரு பிறப்பு எடுக்கும் தன்மை யுண்டாகியுள்ளது. அந்த சங்கிலி மகப்பேறு குறித்து வருந்துகின்றான். ஆதலால் தாங்கள் அந்த சங்கிலிக்கு மகனாகப் பிறக்க வேண்டும்" என்றார்.

இதனைக் கேட்ட தவமுனிவர் தன் தலையில் கையால் மோதிக்கொண்டார். வெயிலின் கொடுமைக்காக–சில நிமிஷம் அவன் தந்த செருப்பையணிந்து கொண்ட ஒரு செயலுக்காக ஒரு பிறப்பு எய்தியதே என்று எண்ணி வருந்தினார். "அறக்கடவுளே! நான் அவனுக்கு மகனாகப் பிறந்தால் பிரமஞானம் அகலாதிருக்க வரம் தாரும்" என்றார் "அப்படியே தாங்கள் பிறப்பெடுத்தாலும் பிரமநிஷ்டராக இருப்பீர்' என்று அறக்கடவுள் கூறினார்.

அவருடைய ஆன்மா சங்கிலியின் மனைவியின் கருவில் சென்று கருவிலிருந்து மகவாகப் பிறந்தது. பிறந்த குழந்தை அழவில்லை. அதுபிரமஞானத்துடன் விளங்கியது தாய்ப்பால் பருகாது நிஷ்டாநுபூதியுடன் திகழ்ந்தது.

இதனை கண்ட ஓரறிஞர் "சங்கிலி! யாரோ ஒரு மகான் வந்து பிறந்திருக்கின்றார். இது தாய்ப் பால் அருந்தாமையால் பசுப்பால் கொடு என்றார்."

சங்கிலி ஒரு பசுவை நீராட்டி பால் கறந்து அம்மகவுக்கு பால் ஊட்டினான். பாலைப் பருகி அவர் சதா நிஷ்டாநுபூதியில் இருந்து வந்தார். அம்மா! அப்பா என்று அழைப்பதில்லை. யாருடனும் பேசுவதில்லை. உலகுக்கு அப்பால்பட்டு விளங்கினார். இவ்வாறு 12 வயது நிரம்பினார்.

சங்கிலிக்கு குழந்தை பிறந்ததே என்று மகிழ்ச்சியிருந்தும், 'மற்ற குழந்தைகள் போல ஆடவும் பாடவும் இன்றி அம்மா அப்பா என்று அழைக்காமல் உலகை மறந்து இப்பிள்ளை இருக்கின்றதே' என்று எண்ணி வருந்தினான்.

ஒரு நாள் சங்கிலி தன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே! நமக்குக் குழந்தை பிறந்தும் பயன் இல்லாமல் இருக்கின்றது. இன்று நான் அரசு அலுவலருடன் அயலூர் போக வேண்டும். இன்று இரவுவீதியில் தமுக்கு அடிக்கும் பணி தடைபடுகின்றது. மகன் இருந்தும் பயன் இல்லை" என்று கூறி வருந்தினான்.

இந்த வார்த்தைகளை கேட்ட அவர் "இன்று இவனுக்காக நாம் தமுக்கு அடித்தால் செருப்புக் கடன் தீரும்; பிறவிப்பிணியும் தீரும்" என்று எண்ணினார். 12 ஆண்டுகளாக வாய்திறந்து பேசாத அம்மகான், "அப்பா! தாங்கள் வருந்த வேண்டாம். நான் இன்று இரவு சென்று அரச வீதியில் தமுக்கடிப்பேன்" என்றார். இந்த மணிமொழியைக் கேட்ட சங்கிலி ஆனந்த வெள்ளத்தில் அழுந்தினான். 'அப்பா' என்ற குரல் அமுதம் போல் அவனுக்கு இனித்தது. ஆ! ஆ! என்று ஆடினான். தனப்புதையல் கிடைத்த தரித்திரனைப்போல் மகிழ்ந்தான். அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"மகனே" என்று அவரைத் தழுவிக்கொண்டான். "நான் பெற்ற செல்வமே! உனக்கு தமுக்கடிக்க தெரியுமா? நான்கு ராஜவீதிகளிலும் அடிக்க வேண்டும். வீதிகளில் நன்றாக உரத்த குரலில் கூவி தமுக்கடிக்க வேண்டும்" என்றார்.

"அப்பா! தாங்கள் கலலைப்பட

வேண்டாம். எல்லாம் இறையருளால் எனக்குத் தெரியும்" என்று கூறியருளினார்.

இரவு 9 மணிக்கு சங்கிலி அரசு அதிகாரியுடன் அயலூர் சென்றான். இரவு 10 மணிக்கு அந்த பரமஞானி தமுக்கை கழுத்தில் மாட்டிக்கொண்டு "அம்மா நான் தமுக்கடிக்கப் போகின்றேன்?" எனக்கூறி விட்டு நகரத்திற்குள் சென்று கிழக்கு ராஜவீதியில் நின்றார்.

அந்த நகரத்தை அறநெறி வழுவாது அரசு புரிகின்ற மன்னன் மிகவுயர்ந்த பக்குவ ஆன்மா! ஞான தாகம் உள்ளவன். குருநாதர் என்று கிடைப்பாரோ பிறவிப்பிணி என்ற தீருமோ? என்று விநாடிக்கு விநாடி துடித்துக் கொண்டிருப்பவன். அவன் அரண்மனையின் மேல்மாடியில் இருந்தான்.

தவசீலர்

மகாஜனங்களே! நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நமக்குள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் என்று ஆறு பகைவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நமது உடம்புக்குள் இருந்து ஞானம் என்ற ரத்தினத்தை அபகரித்துக் கொள்ளுவார்கள். ஆதலால் எச்சரிக்கை எச்சரிக்கை விழிப்பாக இருங்கள்.

என்று கூறி தமுக்கடித்தார். அரண்மனை மேல் மாடியில் இருந்து கேட்ட மன்னன் வியப்பு அடைந்தான். இந்த வேதாந்த வாக்கியத்தைக் கூறி தமுக்கு அடிக்கின்ற உத்தம ஞானி யாரோ? என்று எண்ணி தென்புரமாக வந்து நின்றான்.

தென்மாட வீதியில் வந்து நின்ற தபோதனர் "மகாஜனங்களே! தூங்காதீர்கள். பிறப்பதும் துன்பம், கிழப்பருவத்திலும் துக்கம், மரணமடைவதும் துன்பம். மாறி மாறி துக்கம் தான் சம்சாரமாகிய கடலில் வீழ்ந்து துயரமடைகின்றோம். ஆதலால் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். விழித்துக் கொள்ளுங்கள் அஞ்ஞான இருளில் தூங்காதீர்கள்."

இதனை அரண்மனை மீது இருந்து கேட்ட மன்னன் பரவசம் அடைந்தான். ஆனந்த கண்ணீர் வடித்தான். இனி அந்த குருமகான் என்ன உபதேசிப்பாரோ என்ற எண்ணி மேற்குப்புறம் வந்து நின்றான்.

தபோதனர் மேற்கு ராஜவீதிக்கு வந்தார்.

"மாயையாகிய இருளில் தூங்கி மோசம் போகும் மகாஜனங்களே! நீங்கள் ஆசையாகிய கயிற்றால் கட்டுண்டு கிடக்கின்றீர்கள். பலப்பல எண்ணங்களை எண்ணி எண்ணி அவமே' அழிகின்றீர்கள். உங்கள் ஆயுள்வீணே அழிகின்றது. நீங்களும் அவமே அழிகின்றீர்கள். ஆகையால் எச்சரிக்கையாக இருங்கள். விழித்துக் கொள்ளுங்கள்."

இந்த உத்தம உபதேச மொழிகளைக்கேட்ட மன்னன் தெளிவு பெற்று முக்தி நலம்பெற வேண்டும் என்ற நிலை அடைந்தான்.

தவமுனிவர் வடக்கு ராஜவீதிகளில் நின்று, "நகரத்தில் வாழும் நன்மக்களே தாயாரும்! ஒரு காலத்தில் மாண்டு போவாள்; தந்தையும் மாண்டு போவான் உறவினரும், உடன் பிறந்தோர்களும் மாண்டு ஒழிவார்கள். செல்வம் அழிந்து போகும். நாம் அருமையாகப் புதுக்கிய வீடும் அழிந்து போகும். எல்லாம் நிலையற்ற பொருள்கள். இறைவன் ஒருவன்தான் என்றைக்கும் உள்ள பொருள் அப்பரம் பொருளை நாடி உய்வு பெறுவீர்கள்."

மன்னன் இந்த அரிய உபதேசத்தைக் கேட்டு உள்ளம் உருகினான். இன்னும் இந்த உத்தமர் என்ன உபதேசிப்பாரோ? என்று எண்ணி ஏங்கினான்.

தவமுனிவர் நான்கு ராஜவீதிகளிலும் தமுக்கடித்து விட்டு வீட்டையடைந்து நிஷ்டையில் அமர்ந்து விட்டார். மன்னன் அவருடைய உபதேச மொழிகளையே எண்ணிக் கொண்டிருந்தார்.

பொழுது விடிந்தது, சங்கிலி அவசரமாகத் திரும்பி வீட்டை அடைந்தான். தன் மகன் தண்டோரா ஒழுங்காக அடித்தானோ? இல்லையோ என்று எண்ணி குழம்பினான். "என் அருமை மகனே! இரவு தண்டோரா அடித்தாயா? என்று வினவினான்." அவர் "அப்பா! நீங்கள் ஏன் கவலைப்படுகின்றீர்கள். நான் ஒழுங்காகத்தான் தண்டோரா போட்டேன்" என்றார்.

சங்கிலி அரண்மனை சென்று அரசனை வணங்கினான். அரசன் "சங்கிலி! நேற்று இரவு தண்டோரா அடித்தது யார்?" என்று

கேட்டார்.

சங்கிலி "அரசரே அடியேன் தான் அடித்தேன். குற்றம் இருந்தால் மன்னியுங்கள். அபராதம் கட்ட வேண்டும். என்றாலும் கட்டி விடுகின்றேன்." என்றான்.

அரசன் "சங்கிலி! குற்றம் ஒன்றும் இல்லை. பொய் சொல்லாதே தண்டோரா நீ போடவில்லை. வேறு ஒரு மகான் தமுக்கடித்தார். அவரை நான் வணங்கி வழிபட வேண்டும். அவர் எங்கிருக்கிறார் காட்டு" என்றான்.

சங்கிலி "மன்னர் பெருமானே! தண்டோரா போட்டது அடியேனுடைய தவப்புதல்வன். அவன் என்மகன் என்று பேர்தான்; ஆனால் அவன் பரமஞானி. சதா நிஷ்டையிலேயே இருப்பான்" என்றான்.

அரசன் பல்லக்கை அனுப்பி அவரை மேளதாளத்துடன் அழைத்தான். அவருடைய பாத கமலங்களில் வீழ்ந்து வணங்கினான்.

"குருநாதா! நேற்று இரவு தாங்கள் தமுக்கடித்து என்னை வாழ வைத்தீர்கள். தாங்கள் இவனுக்கு மகனாகப் பிறந்த காரணம் யாதோ?" என்று கேட்டான்.

"அன்பனே! முற்பிறப்பில் பற்றற்ற பரம யோகியாக இருந்தேன்.

சுடுகின்ற மணல் நிறைந்த ஆற்றைக் கடக்கும் பொருட்டு இந்த சங்கிலி தந்த செருப்பைத் தரித்துக் கொண்டு ஆற்றை கடந்தேன். செருப்பையும் அங்கேயே ஆற்றங்கரையிலே விட்டுச்சென்றேன். அந்த செருப்பு கடனுக்கு மகனாகப் பிறந்தேன். நேற்று இரவு தமுக்கு அடித்ததனால் செருப்புக் கடன் தீர்ந்து விட்டது." என்றார்.

அரசன் அவரிடம் உபதேசம் பெற்றுக் கொண்டான் சுவர்க்கத்திலிருந்து விமானம் வந்தது. தபோதனரும் அரசனும் விமானத்தின் மீது ஏறி சுவர்க்கம் அடைந்தார்கள்.

ஆதலால் பிறர் பொருளை எட்டியாக எண்ணி பிறவித் துயரைக் களையவேண்டும்.

சென்னை திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 9-4-2009 அன்று 108 கோபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் சென்னை இந்துசமயஅறநிலையத் துறை இணை ஆணையர் திரு. த. சுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

காரமடை அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

திருமகள் திருநடம்புரியத் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கும் குளிர்ந்த நீர் நிரம்பிய குளங்களைக் கொண்டிருப்பதும், மல்லிகை. முல்லை, செண்பகம் முதலான வாசம் வீசும் மலர்கள் நிறைந்த இயற்கை அழகு மிக்கதும், திருமாலின் திருமேனிபோல் கருநீல வர்ணமானதும், இயற்கை மலைத் தொடரின் ராணி என அழைக்கப் படுவதுமான நீலகிரி மலைத் தொடரின் அடிவாரத்திற்கருகே அமைந்திருப்பது காரமடை என்னும் தலமாகும். ஜீவநதியாகிய பவானி நதியின் கரையில் அமைந்திருக்கும் வளம் நிறைந்த இந்த இடம் முன்காலத்தில் ஆறை நன்னாடு என வழங்கப்பட்டு வந்தது.

இங்கே காரைப் புதர்களும் நீர் ஓடிக் கொண்டிருக்கும் மடைகளும் நிறைந்திருந்த காரணத்தால் இத்திருநகர் காரைமடை என பெயர் பெற்றது.

கோவை மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் கோவையிலிருந்து 29 கி.மீ., தொலைவிலும், மேட்டுப்பாளையத்திலிருந்து 7 கி.மீ., தொலைவிலும் காரமடை அமைந்துள்ளது.

இத்திருத்தலத்தின் மையத்தில் அரங்கநாதர் திருக்கோயில் தனி சிறப்புடன் அமைந்து உள்ளது. கருணைக் கடலாகிய அரங்கநாதப் பெருமாள் தன் வலப்புறத்தே அருள்மிகு அரங்கநாயகித் தாயாரும், இடப்புறத்தே திருப்பாவை அருளிய அருள்மிகு ஆண்டாள் நாச்சியாரும் தனிக் கோயில் கொண்டு இருக்க நடுவில் தான் சுயம்பு வடிவத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இவர் நான்கு யுகங்களையும் கண்டவர். கிருத யுகத்தில் இந்தப் பகுதி செண்பகவனமாக இருந்தது. அதில் இப்பெருமானைப் பிரமன் அர்ச்சித்துப் பேறு பெற்றான். அவன் இங்கே பிரம்மதீர்த்தம் என்ற தீர்த்தத்தைத் தம் பெயரால் உண்டாக்கினான். இத்தீர்த்தமே தற்போது கோயிலின் பின்புறமுள்ள (திருக்கிணறு) தீர்த்தம் ஆகும்.

திரேதா யுகத்தில் அருள்மிகு இந்திரன் வழிபட்டுப் பணிந்து இந்திர தீர்த்தம் சமைத்தார்.

துவாபர யுகத்தில் அருள்மிகு குபேரன் இத்தலம் கண்டு பெருமானை வழிபட்டார். வாசம் நிறைந்த மலர்கள் கூடிய நந்தவனத்தை ஏற்படுத்தினார்.

இந்தக் கலியுகத்தில் பிரகஸ்பதியானவர் இக்காரையில் இலங்கும் கமலை நாயகனை அருள்மிகு அரங்கநாயகித் தாயாருடன் திருக்கல்யாண கோலத்தில் கண்டு வழிபட்டார். அருள்மிகு கருடன் வழிபட்டு இவ்வரங்க வெங்கடேச அச்சுதனுக்கு கருட தீர்த்தம் ஏற்படுத்தினார். இதுவே தற்போது

தெப்பக்குளத் தீர்த்தமாக இருந்து வருகிறது.

முப்பத்து முக்கோடி தேவர்களும் வணங்கி வழிபட்ட காரமடை அரங்கன் சில காலம் மானிடர் எவரும் தெரிந்துணர்ந்து வழிபட முடியாதவாறு மறைந்திருந்தார். பின்னர், தன் அருளை பூமியில் பிறந்தாரும் பெற்று பெருவாழ்வு வாழத் திருவுள்ளம் கொண்டார். அதன்படி ஒரு லீலை நடத்தி வெளிப்பட்டுக் கோயில் கொண்டார். அப்படி அவர் இங்கே கோயில் கொண்ட வரலாற்றை இங்கே காணலாம்.

காரைப் புதர்கள் நிறைந்த இந்த இடத்தில் கொல்லத் தொட்டியர்கள் எனும் இனத்தினர் காராம் பசுக்களை மேய்ப்பதும், மடைகளில் நீரைக் குடிக்க வைப்பதுமாகத் தமது வாழ்வை நடத்தி வந்தனர். ஒரு சமயம் தினமும் நிறையப் பால் கொடுக்கும் ஒரு காராம் பசு மாலையில் திரும்பி வரும்போது மடி வற்றிவரத் தொடங்கியது. அதன் காரணம் புரியாது உரிமையாளர்கள் திகைத்தனர். பல நாட்கள் இப்படியே தொடர்ந்தது.

அதை மேய்த்து வரும் தொட்டியனுக்கு காராம் பசுவின் மீது சந்தேகம் ஏற்பட்டு ஒரு நாள் அதைப் பின் தொடர்ந்து சென்றான். பசு ஒரு புதரின் நடுவே சென்று சுற்றுமுற்றும் பார்த்தது. அவன் அங்கே ஒரு மரத்தின் பின்புறம் ஒளிந்த கொண்டான்.

பசு அங்கு யாரும் இல்லை என நிச்சயித்துக்கொண்டு தன் மடியில் இருந்து பாலைப் புதரில் தானாகவே கரந்து வெளியேற்றியது.

அதைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது. அதே சமயம் புதருக்குப் பால் கொடுக்கிறதே என்று ஆச்சரியமும் அடைந்தான். புதரை விலக்கி உள்ளே என்ன இருக்கிறது என்று அறிய கையில் வைத்திருந்த கொடுவாளால் புதரை வெட்டினான். 'டங்' என்ற சத்தத்தோடு புதரிலிருந்து ரத்தம் பீறிட்டு வந்தது. இரத்தம் வருவதைக் கண்டு அதிர்ச்சியடைந்த தொட்டியன் மயங்கி விழுந்தான். சிறிது நேரத்தில் நினைவு பெற்றெழுந்தான். என்றாலும் அவனுடைய பார்வை பறிபோய் கண்கள் தெரியவில்லை. அவன் பயந்து போனான். செய்வதறியாது திகைத்து அங்கேயே இருந்தான். மாடுகள் வீட்டுக்குத் திரும்பிவிட்டன.

நெடுநேரம் ஆன பின்னும் அவன் வராததால் அவனது உறவினர்கள் கவலை கொண்டனர். அவனைத்தேடி பெரிய தீவட்டிகளுடன் புறப்பட்டனர். பல இடங்களில் தேடிய பின்னர் பசு பால் சொரிந்து வழிபடும் புதருக்கு அருகே வந்தனர். அவர்கள் அங்கே வந்து பார்த்த போது தொட்டியன் கண்கள் தெரியாமல் அழுதுகொண்டு அமர்ந்திருந்தான்.

பக்கத்திலுள்ள புதரிலிருந்து இரத்தம் பீறிட்டு ஓரிடத்தில் சிவப்பாக மடை போலக் காட்சியளித்தது.

மற்றவர்கள் புதரை விலக்கிப் பார்த்தனர். அங்கே சுயம்பு லிங்கம் ஒன்றில் வெட்டுப்பட்டு ரத்தம் பெருகிக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

அப்போது அங்கு நின்றிருந்த ஒருவனுக்கு அருள் வந்து ஆவேசமாக ஆடினான். காராம்பசு எனக்குத் தான் பால் சுரந்து கொடுத்தது, பயப்படாதீர்கள். இந்த இடத்தைச் சுத்தம் செய்து கோயில் கட்டி வணங்குங்கள். உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும் என அருள் வாக்கு மொழிந்தான்.

தொட்டியர்கள் அப்படியே செய்வோம் என்று கூறி வணங்கினர். இறைவனை வணங்கிய பின்பு திடீரென தொட்டியனுக்கு கண்கள் தெரிந்தன. அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஊருக்குள் திரும்பினர்.

அது முதல் அவருக்குப் பூசைகளை நடத்தி வந்தனர். என்றாலும் அதில் உறையும் தெய்வம் திருமாலா, சிவனா, வேறு பெண்

காரை வன நாதனின் ஸ்ரீமுகம்

"திருமகள் தினமும்" என்று தொடங்கும் இக்கடிதம் திருவரங்கநாதர் கோயில் இங்கே அமைந்த வரலாற்றையும் அவரது அருஞ்சிறப்புக்களையும் கூறுவதாகும். பெருந்திருவிழாவில் அர்ச்சகர் கொடியேற்று நாளன்று இதைப் பெருமாள் முன் படித்து அதன்பிறகு உற்சவ நிகழ்ச்சி நிரலையும் படிப்பார். எல்லோரும் பழைய வழக்கப்படி திருவிழாவை நடத்த வேண்டும் என்றும் கலந்து கொண்டு அருள் பெற வேண்டும் என்பதாகவும் இந்தத் திருமுகம் (கடிதம்) அமைந்துள்ளது.

தெய்வங்களா என அறியாது இருந்தனர்.

ஒரு நாள் இறைவன் தொட்டியன் கனவில் வந்து நீங்கள் எனக்குச் சந்தனக் காப்பிட்டுப் பார்த்தால் நான் யார் என்று தெரியும் எனக் கூறி மறைந்தார்.

இறைவன் கனவில் கூறியபடியே மறுநாள் இறைவனுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்து பார்த்தனர்.

இறைவன் சங்கு சக்ரதாரியாக விஷ்ணு பெருமானாகக் காட்சியளித்து மறைந்தார். அவர் மறைந்த லிங்கத்தில் வெட்டுப்பட்ட இடம் இப்போதும் தலையின் மேல் பாகத்தில் உள்ளது. சுயம்பு வடிவில் திருமால் காட்சியளிக்கும் அதிசயத்தை இங்குதான் காணலாம். அன்பர்கள் அங்கே கோயில் கட்டி வழிபாடு செய்துவந்தனர். நாளடைவில் அக்கோயில் விரிவுபெற்று சிறப்படைந்தது.

அரங்கன் நடத்திய அற்புதங்கள்

பிற்காலத்தில் கோவை மாவட்டத்தை ஆட்சி செய்து வந்த மதுரை மன்னன் திருமலை நாயக்கன் தனது மனைவி, மந்திரி, அவரது மனைவி ஆகியோருடன் கோவையில் முகாமிட்டபோது அவருக்கு ராஜ பிளவை எனும் நோய் ஏற்பட்டுப் பெரிதும் வருந்தினார்.

அது சமயம் அருகிலிருந்த பெரியோர்கள் காரமடை அரங்கனைப் பிரார்த்திக்கச் சொல்ல, அவர் அவ்விதமே செய்தார். சில நாட்களில் அவரது நோய் பரிபூரணமாக குணமாகி விட்டது. பின்பு அம்மன்னன் தமது நன்றிக் கடனை செலுத்தும் வண்ணம் காரமடை அரங்கனுக்குக் கோயில் கட்டி திருக்குட நீராட்டு விழா செய்து சிறப்படைந்தார்.

சுமார் 400 ஆண்டுகளுக்குப் பின் 1932ஆம் ஆண்டு பிப்ரவரி 3ம் தேதி

திருக்கோயிலின் பணிகள் பூரணமாக முடிந்து கும்பாபிஷேகம் நடந்தது. அதுமுதல் இத்திருத்தலம் புதுப்பொலிவுடன் சிறப்பாக வளர்ந்து வருகிறது.

அரங்கனின் சக்தியை புலப்படுத்தும் வகையில் அமைந்த ஒரு உண்மை சம்பவம் சுவையாக இன்றும் இங்கே பேசப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒரு வெள்ளைக்கார இஞ்ஜினியர் ரயில்வே இருப்புப் பாதையை இந்தக் கோவிலின் அருகே அமைக்க முடிவு செய்தான். அதைப்

பலர் தடுத்தனர். என்றாலும் கேளாமல் மதிப்பீடு செய்தார்.

அன்றைய வேலை முடிந்து தூங்கும்போது அவர் தன் கனவில் எம்பெருமான் ஒரு வெள்ளைக் குதிரை மேல் ஏறி வந்து கோபத்துடன் தன்னை சாட்டையால் இருமுறை அடிப்பது போல் கண்டாராம். திடீரென கனவு கலைந்து எழுந்த அந்த இன்ஜினியர் தம் தவறை உணர்ந்து எம்பெருமானிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டதுடன், இருப்புப் பாதையை வேறு பக்கம் மாற்றி அமைத்து திருத்திய மதிப்பீடு தயாரித்து மேலிடத்திற்கு அனுப்பினாராம்.

மேலும் தம் சொந்த செலவில் வெள்ளை மரக்குதிரை ஒன்றை செய்து திருக்கோயிலுக்கு காணிக்கையாக கொடுத்து இறைவனை வணங்கினாராம். இன்றைக்கும் இத்திருக்கோயிலில் பெருமாள் வெள்ளைக் குதிரை மேல் எழுந்தருளிதான் பரிவேட்டை உற்சவத்திற்கு திருவீதி உலா புறப்படுகிறார்.

அரங்கன் அன்பர்களுக்கு அருளும் பலன்கள்:–

இத்திருக்கோயிலில் உள்ள இராம பாணம் எனும் ஆயுதம் பேய், பில்லி சூன்யம் மந்திர தந்திரங்களை அகற்றக்கூடியதாக உள்ளது.

தல விருட்சமான காரை மரத்தில் குழந்தை இல்லாதவர்கள் தொட்டில் கட்டினால் குழந்தை பாக்கியம் அடை கின்றனர். பந்த சேவை, தண்ணீர் சேவை, கவாள சேவை முதலியவை செய்யக் கூடியவர்களுக்கு நினைத்த காரியத்தில் வெற்றியும், நல்வாழ்வும் பெறுவர் என்பது இக்கோயிலின் தனிச்சிறப் பாகும். இத்திருத்தலம் கரிகாற்சோழன், மைசூர் மன்னர் கிருஷ்ணராஜ உடையார்,

மாமன்னர் திருமலை நாயக்கர் ஆகிய மன்னர்களால் போற்றப்பட்டு அவர்களின் தாமிர சாசன பட்டயங்களைப் பெற்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றுள்ளது.

வைணவ ஆசாரியரும் ஆதிசேசனின் அவதாரமுமாகிய ஸ்ரீமத் ராமானுஜர் திருவரங்கத்திலிருந்து கர்நாடக மாநிலத்தில் தற்போது மேல்கோட்டை என வழங்கும் திருநாராயணபுரம் எனும் திவ்விய தேசத்திற்கு எழுந்தருளும் போது வழியில், இக்காரமடைக்கு வந்து அரங்கநாதனை வழிபட்டார். இதுவே இத்தலத்தின் பூர்வ வரலாறு ஆகும்.

தினசரி பூஜை காலங்கள்:–

காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை
மதியம் 11.30 மணி முதல் 12.00 மணி வரை
இரவு 8.30 மணி முதல் 9.00 மணி வரை.

திருக்கோயில் காலை 5.30 மணிக்குத் திறக்கப்பட்டு இரவு 9.00 மணிக்கு நடை சாற்றப்படுகிறது.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர்: ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்(கூ.பொ): ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர்: குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை – 21
தொலைபேசி : 25967929

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் முதன்மைச்செயலர்/ஆணையராக பணியாற்றிய திருமிகு. த.பிச்சாண்டி இ.ஆ.ப.அவர்கள் பணிமூப்பின் அடிப்படையில் 30.4.2009 அன்று பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

திருமிகு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப.அவர்கள் புதிய ஆணையராகப் பொறுப்பேற்றார்.

முக்கிய திருவிழாக்கள்:

1. மாசி மகத் திருத்தேர்ப் பெருந்திருவிழா
2. புரட்டாசி சனிக்கிழமைகள்.
3. பகல் பத்து இராப்பத்து ஸ்ரீவைகுண்ட ஏகாதசி உற்சவங்கள்.

ராமபாணம்:–

காரமடை ரங்கநாதர் ஆலயத்தில் மூலத்தானத்தில் பெருமாளைச் சேவித்தபின் ராமபாணம் என்ற ஈட்டி போன்ற ஆயுதத்தை தலையில் வைக்கின்றனர். இதனுள் சகஸ்ரார சுதர்சனச் சக்கரம் மந்திர ரூபமாகப் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். நீண்ட பிடியுடன் கூடிய நீள்சதுர வடிவு கொண்ட தலைப்பாகத்துடன் உள்ளது. இதற்கு வெள்ளிக் கவசமிட்டுள்ளனர். இதனை பக்தர்களின் தலைமீது வைக்கும் போது அவர்களைப் பற்றியுள்ள பேய். பிசாசு, கருப்பு, ஆவி, பீடை, சூன்யம் முதலியவை தொலைந்து போகும். இது இக்கோயிலில் உள்ள சிறப்புக்களில் ஒன்றாகும்.

திருக்கல்யாண உற்சவத்தின் போது தாயார் எழுந்தருளியிருக்கும் பெட்டத்தம்மன் மலையிலிருந்து அவளை அழைத்துவர அருச்சகர் ராமபாணத்துடன் புறப்படுவார். அவளை அழைத்துக் கொண்டு வரும் போது பெருமாள் அவர் மீது ஆவேசிக்க அவர் ராமபாணத்தைச் சுழற்றி ஆடியபடி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

காரமடை அரங்கனை
கண்குளிரக்காண்போம் வாரீர்! வாரீர்!!

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்
வடபழநி - சென்னை - 26

வைகாசி விசாகம், விடையாற்றி பெருந்திருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரின் கோடம்பாக்கம் பகுதியில் அமைந்து பன்னெடுங்காலமாக மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்று அருள் சுரக்கும் வள்ளலாக விளங்கும் வடிவேலன் அருளுகின்ற திருக்கோயில், **அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்**.

பதினேழாம் நூற்றாண்டில் அருட்பெரும் சித்தர்கள் **அண்ணாசாமி நாயக்கர், இரத்தினசாமி செட்டியார், பாக்கியலிங்கதம்பிரான்** ஆகியோர் அருந்தவ வலிமையால் உருவான, இத்திருக்கோயில், அறுபடை வீடுகளுள், பழனியம்பதியை அடியொற்றி நிறுவப்பட்டது. பழனி ஆண்டவரைப் போலவே வடபழநி ஆண்டவரும், அருட்சுரக்கும் செம்மொழிக்கடவுளாக எந்நாட்டவருக்கும், இறை புரிந்து குறைவற்ற செல்வமும், கல்வியும், நல்வாழ்வும் வழங்கி வருகின்றார்.

அருள்மிகு வடபழநி ஆண்டவருக்கு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு **2040** வைகாசி திங்கள் **12–**ம் நாள் **(26.05.2009)** முதல் ஆனி திங்கள்2ம் நாள் (16.06.2009) முடிய **வைகாசி விசாகப் பெருந்திருவிழா** நடைபெற உள்ளது. விழாக் காலங்களில் சிறப்பு நாதஸ்வர இசையும் தேவாரத்திருப்புகழ் இன்னிசையும், வேதபாராயணமும் நடைபெற உள்ளன. விடையாற்றி நாட்களில் மாலை **6.00** மணியளவில் சங்கீத நாட்டிய கலைநிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவு நடைபெறும். அனைவரும் விழாவில் கலந்து கொண்டு திருவருள் பெற அன்புடன் வேண்டுகிறோம்.

தமிழ் தேதி	ஆங்கில தேதி	கிழமை	விசேஷ விபரங்கள்
12	26–05–2009	செவ்வாய்	ப்ரமோற்சவம் ஆரம்பம் மாலை விநாயகர் உற்சவம் அருள்மிகு வரசித்தி விநாயகர் புறப்பாடு
13	27–05–2009	புதன்	ப்ரம்மோற்சவம் 1ம் நாள் உற்சவம் காலை வஜாரோஹணம் காலை 6முதல்7 மணி வரை ரிஷப லக்னத்தில் காலை: மங்களகிரி விமானம் மாலை: மங்களகிரி விமானம்
14	28–05–2009	வியாழன்	2ம் நாள் உற்சவம் காலை: சூர்ய பிரபை, மாலை: சந்திரபிரபை
15	29–05–2009	வெள்ளி	3ம் நாள் உற்சவம் காலை: மங்களகிரி விமானம் மாலை: ஆட்டு கிடா வாகனம், சஷ்டி
16	30–05–2009	சனி	4ம் நாள் உற்சவம் காலை:மங்களகிரி விமானம்., மாலை: நாக வாகனம்
17	31–05–2009	ஞாயிறு	5ம் நாள் உற்சவம் காலை: மங்களகிரி விமானம், மாலை: பஞ்சமூர்த்தி புறப்பாடு
18	01–06–2009	திங்கள்	6ம் நாள் உற்சவம் காலை: மங்களகிரி விமானம், மாலை: யானை வாகனம்
19	02–06–2009	செவ்வாய்	7ம் நாள் உற்சவம் ரதாரோஹணம் காலை 7 முதல் 8–30 மணிக்குள் மிதுன லக்னம்
20	03–06–2009	புதன்	8ம் நாள் உற்சவம் காலை: மங்களகிரி விமானம் மாலை: குதிரை வாகனம்
21	04–06–2009	வியாழன்	9ம் நாள் உற்சவம் காலை: மங்களகிரி விமானம், மாலை: அருள்மிகு வடபழனி ஆண்டவர் புறப்பாடு
22	05–06–2009	வெள்ளி	வைகாசி விசாகம் 10ம் நாள் உற்சவம், காலை: தீர்த்தவாரி கலசாபிஷேகம் மாலை: திருக்கல்யாணம் இரவு: அவரோஹணம் (கொடியிறக்கம்)
23	06–06–2009	சனி	மாலை புஷ்ப பல்லக்கு
24	07–06–2009	ஞாயிறு	வைகாசி விசாக விடையாற்றி உற்சவம் ஆரம்பம்
25	08–06–2009	திங்கள்	பௌர்ணமி, சித்தர்கள் ஆலய அபிஷேகம் மூலம், அருணகிரிநாதர் அபிஷேகம்
1	15–06–2009	திங்கள்	ஆனி மாதம் பிறப்பு
2	16–06–2009	செவ்வாய்	வைகாசி விசாக விடையாற்றி உற்சவம் முடிவு

அன்புடன்

பி.வாசுநாதன்,எம்.ஏ.,பி.எல்.,
துணை ஆணையர்/செயல் அலுவலர்.

டாக்டர்.சீர்காழி கோ.சிவசிதம்பரம்,எம்.டி.
அறங்காவலர் குழுத்தலைவர்.

செ.கண்ணப்பன்,Ex.M.C., **எம்.பழனி,Ex.M.C.,** **கண்மணி சீனிவாசன்,** **ஆ.மணிமாறன்**
அறங்காவலர்கள்.